Registered as a News Paper in Ceylon
விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி இலக்கம் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 213
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 27 றஜபு 10 சனிக்கிழமை (12-9-70)

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# உள்நாட்டு வரிச்சட்டத்தைத் திருத்தி அமைக்க மந்திரிசபை முடிவு

கொழும்பு, சனி
உள்நாட்டு வரிச்சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்ற திருத்தம் இன்று மந்திரி சபையில் நிறைவேற்றப் பட்டது.

திரு. மைத்திரி பாலசேன நாயக்கா தலைமையில் மந்திரி சபைக் கூட்டம் இன்று நடைபெற்றது. நிதி அமைச்சரினல் சமர்ப்பிக்கப்பட்ட 63-ம் ஆண்டின் நிதிச்சட்டத்தின் 11-வது பிரிவில் உள்ள இலங்கையரல்லாதவர்களுக்கு சொத்துக்களை மாற்றும் போது வரி விதிப்பதை விரிவுபடுத்த வேண்டும் என்ற திருத்தமும் நிறைவேறியது.

நிர்வாக சேவை 5-ம் பிரிவின் ஆரம்ப அடிப்படை சம்பளம் ரூபா 4,800 ஆக இருக்க வேண்டும் என்ற திட்டமும் நிறைவேற்றப் பட்டது. 1967-ம் ஆண்டு சம்பளக் கமிஷனின் சபார்சுப்படி இதை அமுல் நடத்த வேண்டும் என்று உள்நாட்டு, உள்ளூராட்சி பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கோரியிருந்தார். 1968 மே மாதத்திலிருந்து இந்தச் சம்பளத் திட்டத்தை அமுல் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

தேயிலை ஏற்றுமதி

## இலங்கைக்குமேலும் இக்கட்டான நிலை

கொழும்பு, சனி
தேயிலை ஏற்றுமதியில் இலங்கைக்கு பலத்த சோதனை ஒன்று ஏற்பட்டுள்ளது. சர்வதேச மார்க்கட்டில் பாதகமான நிலை ஏற்பட்டதே இதற்குக் காரணமாகும்.

இஸ்ரேலுடனான ராஜ்ய உறவுகளைத் துண்டித்த போது தேயிலை விற்பனவில் சர்வதேச மார்க்கட்டில் பாதகமான நிலைமை ஏற்பட்டது. அதன் பின்னர் லூசாக்காவில் நேற்று நடந்து முடிந்த நடுநிலைமை நாடுகளின் மாநாட்டில் தென்னாபிரிக்காவின் ராஜ்ய உறவுகளை நடுநிலைமை நாடுகள் நிறுத்தி வைப்பதென்றும், பொருளாதார நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டதினல் இலங்கைத் தேயிலை விற்பனவில் மேலும் இக்கட்டான நிலை ஏற்படும் என்று கூறப்படுகிறது.

தென் ஆபிரிக்காவின் தேயிலைத் தேவையை 80 வீதம் இலங்கை சமாளித்து வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (சி பி ஏ)

## உதவிப் பி. எம், ஜி.

கொழும்பு, சனி
தபால் மா உதவி அதிபதியாக திரு. கே. எம். பி. ஜெயசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

......

# நாட்டரிசியின் விலை குறைந்தது
# ஒரு கொத்து ஒரு ரூபாய்

## மாநில சுயாட்சி மாநாடு

சென்னை, செப். 11
நாளை சென்னையில் தொடங்கவிருக்கும் மாநில சுயாட்சி மகாநாட்டை வங்காள முதலமைச்சர் அஜாய் முகர்ஜி தொடக்கி வைப்பார். இம்மகாநாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி தலைமைதாங்குவார்.

இம்மகாநாட்டை ஒட்டி திரு. முகர்ஜி, கருணாநிதி, நெடுஞ்செழியன் ஆகியோர் ஊர்வலத்தின் முன் அழைத்துச்செல்லப்படுவார்கள். இம்மகாநாட்டுப்பந்தலை அண்ணா நகரில் அமைத்துள்ளனர். பந்தலைஒட்டி உள்ள விசுவேசுவரய்யா கோபுரம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அந்தமான் தி மு க பொதுச்செயலாளர் மருதவர்ணனும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்.

இம்மகாநாட்டில் ஸ்ரீகண்டன்நாயர் (கேரளா) சர்தார் பிரேம் சிங்லால்புரா (பஞ்சாப்) அரங்கில் ஸ்ரீதரன் (இந்திய சோஷலிஸ்ட் கட்சித்தலைவர்), நாராயணரெட்டி (தெலுங்கானா), காமேஷ்வர் எம் பி (பி சோ), தென்னட்டி விசுவநாதன் எம் பி. பெரியார் ஈ வே ரா, இஸ்மாயில் சாகிப் (முஸ்லிம் லீக்) ம பொ சிவஞானம் (தமிழரசு), எஸ் எம் கிருஷ்ணா எம் பி (மைசூர்), வங்காள காங்கிரஸ் செயலாளர் பெர்ணுப் முகர்ஜி எம் பி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## கூப்பனுக்கு 2 கொத்துத் திட்டமேகாரணமாம்

யாழ்ப்பாணம், சனி
வடமாகாணத்தில் நாட்டரிசியின் விலை திடீரென குறைந்துவிட்டது. கொடிகாமம் சந்தையில் ஒரு கொத்து நாட்டரிசி நேற்று ஒரு ரூபாய் முதல் ஒரு ரூபாய் 10 சதம் வரை விற்கப்பட்டது. கடந்தவாரம் ஒரு கொத்து ரூபா 1-30 சதமாக விற்க பட்டது

இம்மாதம் 26-ம் திகதி முதல் 2 கொத்து அரிசி கூப்பனுக்கு வழங்கப்படவிருப்பதே நாட்டரிசியின் விலைகுறைவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

நாட்டரிசியின் விலை கொத்து 1 ரூபாவாகக் குறைந்ததைத் தொடர்ந்து, வடபகுதியில் கூப்பனுக்கு வழங்கும் இரண்டாவது கொத்து அரிசியைப் பலர் வாங்க மாட்டார்கள் என்றும் வியாபாரிகள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

கூப்பனுக்கு ஒரு கொத்து அரிசி 75 சதமாக வழங்கப்படவிருப்பதாகவும், வெளிச்சந்தையில் நல்ல ரகமுள்ள குத்தரிசி ஒரு கொத்து ஒரு [illegible]வுக்கு விலைப்படுவ[illegible] பெரும்பாலான மக்கள் கூப்பன் அரிசியை வாங்க விரும்பமாட்டார்கள் எனவும் அவர்கள் [illegible]

## பலாங்கோடை ந.ச. கலைக்கப்பட்டது

பலாங்கொடை, சனி
பலாங்கொடை நகர சபை கலைக்கப்பட்டுள்ளது. சட்டதிட்டங்களை உதாசீனம் செய்தமையே இதற்குக் காரணம் என்று பதில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. நீல் டி. அல்விஸ் தெரிவித்துள்ளார். திரு. ஏ. ஆர். கருணாரத்ன கலைக்கப்பட்ட நகரசபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சந்நிதி கோவிலில்

## கால்சட்டையுடன் பொலிஸ் அதிகாரி தீக்குளித்தார்

வல்வெட்டித்துறை, வெள்ளி
ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் பலர் தீக்குளிப்பில் கலந்து கொண்ட போது அதைப் பார்த்துக் கொண்டிருந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரும் தான் அணிந்திருந்த கால் சட்டையுடனேயே தீயில் இறங்கி மூன்றுமுறை தீகுளித்தார்.

இச்சம்பவம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் 10-ம் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவன்று நடைபெற்றது.

இங்கு உற்சவத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான திரு முத்துக்கிருஷ்ணன் என்பவரே இத் தீக்குளிப்பில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரியாவார். ஆண்களும் பெண்களுமாக 25பேர்வரை தீக்குளிப்பில் கலந்துகொண்டனர் முன்னைய ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் தூக்குக்காவடி எடுக்கப்பட்டது.

## கல்வி நிலை; காலி எம்.பி. பேச்சு

கொழும்பு, சனி
முன்னைய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சம்பந்தமாக தவறான புள்ளிவிபரங்களைத் தந்துகொண்டிருந்ததன் மூலம் நாட்டுமக்களின் கருத்தை வேறு திசையில் திருப்பிவிட்டுக்கொண்டிருந்தார். அதேநிலைமேலும் தொடராமல் பட்டதாரிகளின் பிரச்னைகளை உடனடியாகத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்".

இவ்வாறு காலி எம். பி. டாக்டர் தஹநாயக்கா கூறினர். நிதி அமைச்சரினல் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலவரவு செலவு அறிக்கை மீதான விவாதத்தில் டாக்டர் தஹநாயக்கா இன்று பேசினர்.

## மன்னர்களுக்கு இடைக்கால

## மறைந்த தொண்டருக்கு

## வவுனியா பலாத்கார வழக்கில் எதிரி விடுதலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...என்று கூறப்படுகிறது. நாட்டரிசியின் விலை ஒரு 1 ரூபாவாகக் குறைந்ததைத் தொடர்ந்து, வடபகுதியில் கூப்...

...வாங்க விரும்பமாட்டார்கள் எனவும் அவர்கள் விளக்கம் கூறுகின்றனர். (கு' வி. ம)

...ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

...ஞர், நிதி அமைச்சரினால் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலவரவு செலவு அறிக்கை மீதான விவாதத்தில் டாக்டர் தஹா நாயக்கா இன்று பேசினார்.

## மன்னர்களுக்கு இடைக்கால மான்யம் கொடுக்க ஏற்பாடு?

புதுடில்லி, செப். 11

அதிகாரம் பறிக்கப்பட்ட பழைய சமஸ்தான மன்னர்களுக்கு இடைக்கால மான்யம் ஒதுக்குவதற்காக உப பட்ஜெட் தாக்கலாகுமென தெரியவருகிறது. ஆனால் இதுபற்றி மாஜி மன்னர்களுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறுதெனத் தெரிகிறது. 10 வருட ராஜ மான்யத்துக்குச் சமமான ரூபா 40கோடி நஷ்டஈடெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ராஜ மான்யத்தை ரத்துச்செய்யும் உத்தரவை எதிர்த்து இந்திய சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கலாகுமென நம்பப்படுகின்றது. ஆனால் ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிராக மாஜி மன்னர்கள் வழக்குப் போடுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென அரசாங்க சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மன்னர்களின் நகைகள், வைரங்கள் முதலியன சுவிற்சர்லாந்து பிரிட்டன், துருக்கி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை கணக்கிடப்படும். மத்திய பிரதேசத்தில் உள்ள மாஜி மன்னர்களின் கார்கள் பதிவு செய்யப்படுவதோடு, இன்சூர் செய்யப்படவேண்டும்: இவர்களுக்கு அளித்து வந்த பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.

## பனம் பழத்திற்குக் காவல் இருந்தவருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், சனி

பனம்பழத்துக்கு காவல் இருந்தவரை நள்ளிரவில் இனம் தெரியாதவர்கள் படுகாயப்படுத்தினராம். வாள்வெட்டுக்கும் அடி காயங்களுக்கும் இலக்கான இவர் அபாயகரமானநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் வாசியான முருகர் கணேசு என்பவரே இவ்விதம் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவர் இவரது வாய்முறைப்பாட்டை யாழ்ப்பாணம் பொலிஸ்பகுதி திரு. கார்த்திகேசு பதிவுசெய்தார்.

பனம்பழத்திற்காகப் பனங்காணியொன்றைத் தானும் மகனும் குத்தகை எடுத்திருந்ததாகவும், திருடர்கள் அக்காணியில் பனம்பழங்களைப் பொறுக்கிவிடுவதாயும் எனவே சம்பவதினம் அக்காணியில் காவலுக்குப் போயிருந்ததாயும் அவ்வேளை இனந்தெரியாதவர்கள் தம்மைத் தாக்கியதாகவும் முருகர் கணேசு தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

## மறைந்த தொண்டருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி

'சமயத் தொண்டையே வாழ்வின் உயிர் மூச்சாகக் கொண்ட பெரியார்களைச் சமூகம் மறந்துவிடாது. அமரரான திரு. அதிரியான் பிலிப்புவின் வாழ்க்கை சமயத்துக்காகவே கழிந்தது. அவரை நினைவில் வைத்துக் கொள்ளுதல் நம்மவர் கடமையாகும்' என யாழ்ப்பாணம் சென். மேரிஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கிடுத்தார் திரு. அதிரியான் பிலிப்புவின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய மாநகரசபை உறுப்பினர் திரு. செ. யோ. வீரசிங்கம் குறிப்பிட்டார்.

## வவனியா பலாத்கார வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

வவனியா பலாத்கார வழக்கில் எதிரி சிறிசேனு விடுதலை செய்யப்பட்டார்.

1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி வவனியா வில்பாவற்குளம் என்ற இடத்தில் குசுமாவதி என்ற பெண்ணை பலாத்காரம் செய்ததாக சிறிசேனு என்ற வாலிபர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிரெட்சர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

எதிரி சுற்றவாளியென ஜூரர்கள் ஏகமனதாகத் தெரிவித்த முடிவைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரி சார்பில் அட்வகேட் வி. ஜெகசோதி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 3 கோடி ரூபா நஷ்டம்

புதுடில்லி, செப். 11

சமீபத்தில் குஜராத்தில் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கால் 3 கோடி ரூபா நஷ்ட மேற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

800 தொழிற் ஸ்தாபனங்களும் பரோடா, புரோச் ஆகிய இடங்களிலுள்ள 87 கிராமங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு அரசு, உணவு, உடை ஆகியவற்றை வழங்குகிறது

## ஓவசியர்கள் புகார் பற்றி கி. ச. தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புலோற்பளை கிராமசபையில் திரு. செபஸ்தியாம்பிள்ளை என்றுமே கடமையாற்றவில்லை யென்பதையும் சபை அவருக்கு சம்பளம் கொடுக்க வேண்டியநிலைஏற்படவில்லையென்றும்புலோற்பளை கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. இராஜசூரியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புலோற்பளை கிராமசபை ஓவசியர்களாய் கடமையாற்றியவர்களுக்கு சபை அநீதி விளைவித்ததாக ஐக்கிய உள்ளூராட்சி சேவை ஓவசியர்சங்க விசேஷ கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதாக வெளிவந்த செய்திபற்றியே இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது: திரு கனகரத்தினத்தின் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பிரச்னைக்குள்ளாகியிருக்கிறது. உள்ளூராட்சி சேவைக் கமிஷன் அவரது வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தையிட்டு இரகசிய பொலிஸாருடன் தொடர்பு கொள்ளும்படி தெரிவித்துள்ளார். தற்போதைய ஊழியரான திரு. கதிர்காமநாதனுக்கு அவரது சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு ஓவசியர்களால் வசூலிக்கப்பட்ட தொகை கிராமசபையிடம் அவர்கள் பெறும் சம்பளத்தின் 5 வீதத்திற்கு மட்டும் சமனானதாகும். அவர்கள் மீது ஏற்கனவே உள்ளூராட்சிக் கமிஷனிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மனைவி சென்றதால் கணவன் தற்கொலை

கொச்சிக்கடை, வெள்ளி

மனைவி கைவிட்டு வேறொருவருடன் சென்றதால் மனவேதனை யுற்ற ஒருவர் கயிற்றில் தொங்கி மரணத்தை சரணடைந்தார்.

கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த அத்கால என்னும் கிராமத்தில் இச் சம்பவம் நடைபெற்றது. சத்தியாபிள்ளை அந்தோணி பீரிஸ் என்ற 32 வயதான நபரின் மரண விசாரணையின் போது அவர் மனைவி கைவிட்டுச் சென்றபின் கவலை காரணமாக மது அருந்தி வந்ததாகவும், சம்பவ தினம் மது அருந்திய பின்னர் வீட்டினுள் கயிற்றில் தொங்கி உயிர் விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சை

## கல்வி அமைச்சருக்கு பண்டிதர் கடிதம்

யாழ்ப்பாணம், சனி

''இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் உதவி ஆசிரியர் நேர்முகப்பரீட்சையின், தேர்வுமுறை பிழையானது. பட்டதாரிகளின் தகைமை, திறமை, கல்வி நிலையங்களின் தேவை ஆகியவற்றிற்கு ஏற்பத்தெரிவு செய்ய வேண்டிய வழிமுறைகளைச் செய்யுமாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், கல்விஅமைச்சர் பதியுதீன் மஹ்மூத்திற்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

10-8-70-ல்தாங்கள் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குக் கூறிய வகையில் பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை எனவும், ஏ, பி, ஸி என்ற வகுப்பு முறையிலேயே நடைபெறுவதாகவும் அறிகிறேன். இது முரண்பாடான செய்கையாகும். ஒரே பாடத் தொகுதியை எடுத்த பட்டதாரிகள் ஒரே தரத்தில் பவர் இருந்தால், அவர்கள் சித்தியடைந்த ஆண்டைக் கொண்டு தெரிவுசெய்வதே நல்லது. இம்முறையில் நேர்முகப் பரீட்சையில் மாணவர்களைத் தெரிவுசெய்ய வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்'',

# யாழ்ப்பாணத்தில் பிரதமரின் மகன் அனுரா

யாழ்ப்பாணம், சனி

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் மகன் புதல்வர்அநுரா பண்டாரநாயகா நேற்று முன்தினம், முதல் தடவையாகா யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

அவர் தமது நண்பர்களுடன் யாழ்ப்பாணத்தில் பல இடங்களைபார்வையிட்டபின் நயினாதீவு கோவிலுக்கும் சென்றார்.

யாழ்ப்பாணம் சுதந்திரக் கட்சிக்கிளையின் தலைவர் திரு அல்பிரட் துரையப்பாநேற்று முன்தினம் திரு. அநுராபண்டாரநாயக்காவிற்கு அவரது இல்லத்தில் வைத்து இரவு போசனவிருந்தளித்தார்.



## பதவியேற்ற 5-ம் நாள் விபத்தில் மரணம்

புதுடில்லி, செப். 11

பீகார் இராஜ்யத்தின் அமைச்சருள் ஒருவரான திரு. யாதவ் இன்று கார் விபத்தில் சிக்கி மரணமானார், பாட்னாவுக்கு அருகில் இவ்விபத்து நடந்தது.

35 வயதான திரு. யாதவ் கடந்த திங்கட்கிழமையே அமைச்சராகப் பதவியேற்றார். இவ்விபத்தில் அமைச்சரது சகோதரர் ஒருவரும் மாண்டார்.

அமைச்சரின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக பீகார் இராஜ்ய அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

## வவனியா நகரசபை கலைக்கப்படும்?

வவனியா, சனி

வவனியா நகரசபைவிரைவில் கலைக்கப்படலாமெனத் தெரிகிறது.

உள்ளூராட்சிஅமைச்சினால் வவனியா நகரசபைத் தலைவர் திரு ம பொன்னையாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் வவனியா நகரசபையில் நிலவும் ஊழல்களை விசாரணைசெய்து தலைவரை ஏன் பதவிநீக்கம் செய்யக்கூடாது என்பதற்குரிய காரணத்தை 15 நாட்களுள் சமர்ப்பிக்குமாறுகேட்கப்பட்டுள்ளது


## மிருதங்க அரங்கேற்றம்

சங்கீதபூஷணம் A. S. இராமநாதனின் மாணவன் செல்வன் ஜெயன் செல்வக்குமாரின் மிருதங்க அரங்கேற்றம் 1970 செப்டம்பர் 14 திங்கட்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் டாக்டர் N. T. சம்பந்தன், திருமதி சம்பந்தன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

2440



சங்கீதபூஷணம்

செல்வன் சி. பத்மலிங்கம்

அவர்களின்

## இசை அரங்கேற்ற விழா

திகதி: 12-9-70 சனிக்கிழமை மாலை 6 மணியளவில்

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தசர்மா — வயலின்

திரு. ஏ. எஸ். இராமநாதன் — மிருதங்கம்

திரு. கே. கணேசன் — கஞ்சிரா

2443


# நாட்டில் எங்குகண்டாலும் கைதுசெய்யப் பிரகடனம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் பரபரப்பையேற்படுத்திய சுன்னுகம் மயானக்கொலை வழக்கில் முக்கிய சாட்சியான ஏழாலையைச் சேர்ந்த சின்னையா தருமலிங்கம் என்பவரை இந்நாட்டில் எங்கு கண்டாலும் பொலிசாரைக் கைது செய்யும்படி நீதியரசர் திரு ஓ. எல். டி, கிரெஸ்டர் நேற்று பகிரங்கப் பிரகடனம் செய்தார்,

இச் சாட்சி பற்றித் தகவல் தெரிந்தவர்கள் சமீபத்திலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கிராம சேவகர்களிடமோ தகவல் கொடுக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நேற்று இவ் வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் கிரெட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதுநீதியரசர் ஏ. எல்; எஸ் சிறிமானேயால் சாட்சிமீது பிறப்பிக்கப்பட்ட வாரன்ட் யாழ்ப்பாணம் பிஸ்காலினுலும் பொலிஸ் அதிபரினுலும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன: இதைத் தொடர்ந்தே நீதியரசர் பகிரங்கப் பிரகடனம் செய்தார்.

1969 மே மாதம் 27-ம் திகதி சுன்னுகம் மயானத்தில் குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராசாவைக் கொலை செய்ததாக தம்பு கிருஷ்ணன் என்பவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் முக்கியசாட்சியான சின்னையா தருமலிங்கம் கிளிநொச்சியில் வேலை செய்பவரென்றும் வவனியாவுக்கு அடிக்கடி சென்று வருபவரென்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை இம் மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்


### தேவை

கம்மாலை வேலையாட்கள்:

கம்மாலையில் உலோக, இரும்பு வேலைகள் செய்யக்கூடிய அனுபவமிக்க வேலையாட்கள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். மனேஜர், ஸ்ரார் எலெக்றிக் வெல்டேர், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்' 2940

ஆசிரியைகள்:

ஜி. சி. ஈ கலை/விஞ்ஞானப் பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியைகள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், இல. 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2939

### விற்பனைக்கு

காணி:

மண்டைதீவு அம்மன் கோவில் சந்தியில் 30 பரப்பு நல்ல விளைச்சல் உள்ள நெற்காணி விற்பனைக்கு உண்டு. V. P. சண்முகநாதன், 3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2942

### கல்வி

பெண்மணிகளுக்கு:

எண்கணிதம், தூய கணிதம், இரசாயனம், பௌதிகமாகிய பாடங்கள் பெண்களுக்கு மட்டும் விஞ்ஞான பட்டதாரிப் பெண்மணியினால் (G. C. E. o L) பரீட்சைக்குக் கற்பிக்கப்படும் விபரங்களுக்கு: 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2941

### விற்பனைக்கு

பெர்குஷன் டிறக்ரர் 12 ஆணிப்பெட்டி ஒன்றும் றில்லர் ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஐஞ செங்கல் ஓட்டுத்தொழிற்சாலை, கண்டாவளை. 2938


## 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் பொலிஸ் வார விளையாட்டு விழா

# பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், சனி

பொலிஸ் தின விளையாட்டு விழாவை முன்னிட்டு 'ஈழநாடு' நடாத்தும், பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வெகு குதூகலமாக இன்று ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் யாழ் மாவட்டத்தில் உள்ள பல முன்னணி மகளிர் கல்லூரிகளின் வலைபந்தாட்டக் கோஷ்டிகளும், விளையாட்டுக் கழகக் கோஷ்டிகளும் கலந்து கொள்ளுகின்றன. இப்போட்டி மாலை 3-30க்கு ஆரம்பமாகின்றது. இம்மாதம் 18ம் திகதி வரை தினமும் இருபோட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டியின் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இன்று ஆரம்பமாகி 18ம் திகதிவரை நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டியைப் பற்றிய விபரம் வருமாறு:-

**1வது சுற்று 12-9-70**

1- கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் அரியாலை யுனைட்டட் கழகம் இப்போட்டிக்கு திருமதி எம். தம்பிநாயகம், செல்வி எஸ். தர்மலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

2- யாழ்ப்பாணம் ஆங்கில கொன்வென்ட் எதிர் இளவாலைக் கொன்வென்ட் இப்போட்டிக்கு திருமதி எல் பாலசிங்கம், செல்வி எஸ். தர்மலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

**2-வது சுற்று 13-9-70**

1- இளவாலை கொன்வென்ட் எதிர் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம். இப்போட்டிக்கு செல்வி எஸ் தர்மலிங்கம், திருமதி ஆர். ஞானநந்தா ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

2- ஆரியாலை யுனைட்டட் கழகம் எதிர் வேம்படி மகளிர் கல்லூரி இப்போட்டிக்கு திருமதி எம். தம்பிநாயகம். திருமதி ஆர். ஞானந்தா ஆகியோர் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

**3-வது சுற்று 16-9-70**

1- அரியாலை யுனைட்டட் கழகம் எதிர் யாழ்ப்பாண ஆங்கில கன்வென்ட். இப்போட்டிக்கு திருமதி எல். பாலசிங்கம், செல் எஸ். தர்மலிங்கம், மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

2- வேம்படி மகளிர் கல்லூரி எதிர் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம். இப்போட்டிக்கு திருமதி எல். பாலசிங்கம், திருமதி எம். தம்பிநாயகம் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

**4-வது சுற்று 17-9-70**

1- யாழ்ப்பாண ஆங்கில கன்வென்ட் எதிர் வேம்படி மகளிர் கல்லூரி. இப்போட்டிக்கு திருமதி ஆர். ஞானநந்தா, திருமதி எல். பாலசிங்கம் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

2- இளவாலை கன்வென்ட் எதிர் ஆரியாலை யுனைட்டட் கழகம். இப்போட்டிக்கு செல்வி எஸ். தர்மலிங்கம், திருமதி ஆர் ஞானநந்தா மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

**5-வது சுற்று 18-9-70**

1- வேம்படி மகளிர் கல்லூரி எதிர் இளவாலை கன்வென்ட். இப்போட்டிக்கு திருமதி ஆர். ஞானநந்தா, திருமதி எம். தம்பிநாயகம் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

2- கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் ஆங்கில கன்வென்ட். இப்போட்டிக்கு திருமதி ஆர். ஞானநந்தா, செல்வி எஸ். தர்மலிங்கம் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் திருமதி குகததாசன் மேற்கொண்டுள்ளார். (தே. நி.)

# கரபந்தாட்டப் போட்டி முடிவுகள்

'ஈழநாடு ஆதரவில் யாழ். மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத் திடலில் நடைபெற்றுவரும் கரபந்தாட்டப் போட்டிகளில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த 'கால் அரை' இறுதிப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**கே. கே. எஸ். வெற்றி**

கே. கே. எஸ். யுனைட்டட் கழகத்துக்கும், யாழ். கரபந்தாட்ட கழகத்துக்குமிடை...

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

அ[illegible]வலி பேண்ஹாம் பா[illegible]லை இல்ல விளையாட்டுப்போட்டிகள் நாளை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. சிறுவர் [illegible] தேவை ஆ[illegible]யாளர் திரு. [illegible] இராஜகருணை பிர...

## உள்ளூராட்சிமன்றசட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்

### பதில் அமைச்சர் தகவல்

காலி, வெள்ளி

'உள்ளூராட்சிமன்ற சேவையின் சட்டங்கள், வசதிகள் ஆகியன யாவும் மக்களின் நலன் கருதி விரைவில் மாற்றியமைக்கப்படவுள்ளன'

உள்ளூராட்சிமன்ற பொது நிர்வாகம், உள்ளூர் விவகார பதில் அமைச்சர் திரு. நீல் டி அல்விஸ் பொல்பகொடை கிராம சபை காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

உள்ளூராட்சிமன்றசேவையின் சட்டங்களில் அநேகமானவை காலத்திற்கு ஒவ்வாதவை. எதிர்காலத்தில் குறைந்த வருமானமுடைய உள்ளூராட்சிமன்றங்களுக்கு அரசாங்கம் கூடிய உதவிகளைச்செய்யும். பொதுக் கிணறு வெட்டுதல், விளையாட்டு நிலம் அமைத்துக் கொடுத்தல்போன்ற பலவசதிகளைக் கிராமங்களுக்குச் செய்து கொடுப்பதில் பல ஆண்டுகளாகத்தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இவற்றிற்குத் தேவையான நிலத்தைப் பெறுவதில் உள்ள கஷ்டமேயாகும் இதுமட்டுமன்றி அநேகமான உள்ளூராட்சி மன்றங்கள் அவை வசூலிக்கவேண்டிய வரிகளை வசூலிக்கவில்லை இதனால் பெருந்தொகையான பணம் வசூலிக்கவேண்டியுள்ளது. வரிவசூலிப்பதில் உள்ள கஷ்டங்களைப் போக்கவே உள்ளூராட்சிஅமைச்சு வரிவசூலிக்கும் அதிகாரத்தைப் பிரதான லிகிதருக்கு அளிக்கத் தீர்மானிக்கிறது.

மேற்படி கூட்டத்திற்குத் தலைமைவகித்த பொல்பகொடை கிராமசபைத் தலைவர் உட்பட பலர் உரையாற்றினர்.

## உடலுக்கும் உள்ளத்துக்கும் அருமருந்து இசை'

தாவடி, வெள்ளி

''உள்ளத்தைக் கனியச் செய்து மனதைத் தூய்மையாக்கும், அருமருந்து இசை. மனநோய்க்குரிய சிறந்த மூலியுமாகும். சைவசமயம் குன்றியிருந்த காலத்தே தமிழும் அதனுடன்இணைந்த இசையும் குன்றியேயிருந்தன இற்றைக்கு 20 ஆண்டுகளுக்குமுன் இசை ஒரு சாராரிடமே இருந்துவந்தது ஆனல், இப்போது சைவசமயம், தமிழ்மொழி அதனுடன் தமிழிசை[illegible] வளர்ச்சிடைந்து வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். காலத்துக்குக்காலம் [illegible] இசைக்கு விழாவெடுப்[illegible] தமிழ் மக்களின் புகழை மேலோங்கச் செய்வது[illegible] ... போது, உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கூறினார்:

''வாத்தியக் கருவிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்ய அரசாங்கம் முன்வருதல் சிறப்புடையதாகும் இசைக்கலைமன்றங்களுக்கு அரசாங்கம் வருடத்துக்கு 1800 ரூபா சன்மானம் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். கல்வியுடன் இணைந்து சங்கீதமும் இயங்குதல் வேண்டுமென்ற பெருவிருப்பம் கொண்டுள்ளது அரசாங்கம்'' என்று அவர் மேலும் கூறினர்.

செல்வி ராதாதேவி சபாபதிப்பிள்ளை, சங்கீத பூஷணம் பொன் சுந்தர...

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 27-ம் திகதி (12-9-70)

மேஷம்- நீண்ட நாட்களின் பின்பு இன்று நிறைவான தினம். சுவையான சம்பவம் நடைபெறும்.

ரிஷிபம்- வாய்வுக்கோளாற்றினால் வேதனைப்படுவீர்கள். விபத்துக்கும் இடம் உண்டு.

மிதுனம்- குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். பொன்னான தினம்.

கடகம்- பணவிடயத்தில் அதிக சிக்கனத்தை கடைப்பிடிக்கவும். பிறரை நம்பாமல் இருத்தல் நன்மையாகும். தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும்

கன்னி- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. செலவீனங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

துலாம்- பொருள் வரவு உபசாரம். பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

விருட்சிகம்- எதிர்பாராத விளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும். பிணிக்கு இடம்கொடாது இருக்கவும்.

தனுசு- உறவுமுறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கும் இடம் உண்டு.

மகரம்- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும் ஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

கும்பம்- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். தெய்வநம்பிக்கை வேண்டும்.

மீனம்- அன்னைவழி ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், சனி

இன்று நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன இசைவிழாப் பந்தலில் சங்கீத பூஷணம் செல்வன் சி. பத்மலிங்கத்தின் இசை அரங்கேற்றம் நடைபெறும். இவ்வரங்...


## விளம்பரம்

### கச்சாய் கிராமசபை

நாவலடி இராசா வீதி அரசினர் நன்கொடை (1969/70) வேலைக்கான கேள்விகள், அக்கிராசனர், கச்சாய் கிராம சபையால் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் தேதி வியாழக்கிழமை காலை 9-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் அல்லது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் ரூபா ஐயாயிரத்திற்கு (ரூபா 5,000/-) மேற்பட்ட வேலைகளுக்கெனப் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை ரூபா 50/-வைப்புப் பணமாகவும் ரூபா 10/- பத்திரப் பணமாகவும் கட்டியதன் பேரிற் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணமான ரூபா 10/- திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை
அக்கிராசனர்

கச்சாய் கிராமசபை,
கொடிகாமம், 11-9-1970
2444


## சு. கட்சிக் கிளை நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டியில் வடபிராந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு எம். துரைராசாவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. நா. கணேசசிங்கராசா, உப தலைவர்: திரு. பொ. கந்தப்பு. செயலாளர்: திரு. கே யோகநாதன், பொருளாளர்: திரு சி நல்லதம்பி, உப-செயலாளர்கள்: திருவாளர்கள் க. மார்க்கண்டு, ஐ. தர்மலிங்கம், ச. மணிசுந்தரம்.

17பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அந்தோனியார்


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்

2-வது வெற்றி வாரம்
ராஜா - யாழ்ப்பாணம்
(10-30, 2-30, 6-30, 9-45
பிரேம்நசீர், செம்மீன் ஷீலா, சாரதா, மது
மற்றும்
இந்திய ஜனதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற
துலாபாரம்
(மலையாளம்)
(எஸ். ஈ: ஆர். பிலிம்ஸ்)

யாழ் - வின்சர் திரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மலையாளம்)
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

யாழ் - வின்சர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்; ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த
பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்தவள்
- விஜயா -
அவள் கதை மட்டுமல்ல 'துலாபாரம்' உள்ளத்தை உருக்கும் ஒரு கண்ணீர் காவியம். உணர்ச்சி ஓவியம் ... ... ... வாழ்க்கைப் பாதையில் அவள் சந்தித்தது சாதாரண மேடு பள்ளங்களல்ல!
சமுதாயத்தையே திணற வைத்துக் கொண்டிருக்கும் மாபெரும் பிரச்னைகள் அவை. அவைகளுக்கு முடிவு தேடினாள் ... அவள் எடுத்த முடிவு சரியா? தீர்ப்புக் கூறுங்கள் நீங்கள் ...
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்



துலாபாரம்
(தமிழ்)
★ ஏ. வி. எம். ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸென்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

...தினம் நடைபெற்று முடிந்த 'கால் அரை' இறுதிப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### கே. கே. எஸ். வெற்றி

கே. கே. எஸ். யுனைட்டட் கழகத்துக்கும், யாழ். கரபந்தாட்ட கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'செட் அப்' போட்டியில், கே. கே. எஸ் கோஷ்டி 2-0 ஆட்டங்களால் வெற்றிபெற்றது.

### மோகனதாஸ் வெற்றி

சாவகச்சேரி மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் வல்வெட்டித்துறை யுனைட்டட் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'செட்-அப்' போட்டியில், மோகனதாஸ் 2-0 ஆட்டங்களால் வெற்றிபெற்றது

### நவஜீவன்ஸ் வெற்றி

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், சிவன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'ஓவர்-கேம்' போட்டியில் நவஜீவன்ஸ் 2-0 ஆட்டங்களால் வெற்றிபெற்றது.

### பொம்பஸ் வெற்றி

வதிரி பொம்பஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், சாவகச்சேரி மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'ஓவர் கேம்' போட்டியில், வதிரி பொம்பஸ் கழகம் 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. (தே. நி)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
ஜெய் சங்கர் - கே. ஆர். விஜயா
நடித்த
பஞ்ச வர்ணக்கிளி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி பி. ப. 4-45
7 & 9-45
MIGHTY JOE YOUNG

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45p.m.
Lloyd Bridges,
Joan Blackman
in
DARING GAME
[Color]

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Kirk Douglas,
James Mason
in
20,000 LEAGUES
UNDER THE SEA

...பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டிகள் நாளை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. சிறுவர் பரிபாலன சேவை ஆணையாளர் திரு டபிள்யு. ஆர். இராஜகருணை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## அளவெட்டியில் இசைவிழா

யாழ்ப்பாணம், சனி

அளவை இசைக்கலை மன்றம் இன்று தொடக்கம் 15ம் திகதிவரை நான்குநாட்கள் இசைவிழா நடத்துகிறது. அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் விழா நடைபெறும் மாலை 6 மணிக்கு விநாயகராலய பூசையுடன் ஆரம்பமாகும் இன்றைய நிகழ்ச்சிகளுக்கு விக்டோறியாக் கல்லூரி அதிபர் திரு. சு. சிவசுப்பிரமணியம் தலைமைதாங்குவார்.

இன்றைய நிகழ்ச்சிகள்வருமாறு: மாலை 6-30—7-30 என். குமரகுரு கோஷ்டியினர் மங்கள இசை. 7-30—8-15 மன்ற மாணவர் பாட்டு. 9-15—9-30 தலைவர் உரை. 9-45—10-45 வி. செல்லத்துரை பாட்டு 10-45—11-45 என் சண்முகரத்தினம், எஸ். சண்முகராகவன் பாட்டு.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகிதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 உங்கள் பிரச்னை, 6-45 வீட்டுடாக்டர், 7-00 புல்லாங்குழல், 7-15 சித்திரம், 7-45 இவ்வாரபிரமுகர், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

...அதனுடன் தமிழிசையும் வளர்ச்சியடைந்து வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். காலத்துக்குக்காலம் தமிழ் இசைக்கு விழாவெடுப்பது தமிழ் மக்களின் புகழை மேலோங்கச் செய்வதுடன் பெருமையையும் அளிக்கும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குப் பண்ணோடிசை கற்பிப்பது போற்றுதற்குரியதாகும். இதனால் ஆத்மலாபமும்- ஈடேற்றமும் உண்டாகும். தமிழ்மக்களின் சார்பாக, சைவமக்கள் சார்பாக அண்ணாமலை தமிழ் இசை மன்றத்தைப் பாராட்டுகிறேன்.''

இவ்வாறு, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில்நடைபெற்றுவரும், அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற இசை விழாவின் ஆறும் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்...

...மென்ற பெருவிருப்பம் கொண்டுள்ளது அரசாங்கம்'' என்று அவர் மேலும் கூறினார்.

செல்வி ராதாதேவி சபாபதிப்பிள்ளை, சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் ஆகியோரின் இன்னிசையும் இடம்பெற்றன.

......

## யாழ்ப்பாணத்தில் கண்டி அரசன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இம்மாதம் 13ந் திகதி மாலை 7 மணிக்கு பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தாரின் 'கண்டி அரசன்' என்னும் வரலாற்று நாடகம் மேற்படி கல்லூரியின் சாரணர் குழு நிதிக்காக மேடையேற்றப்பட இருக்கிறது.

...

யாழ்ப்பாணம், சனி

இன்று நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன இசைவிழாப் பந்தலில் சங்கீத பூஷணம் செல்வன் சி. பத்மலிங்கத்தின் இசை அரங்கேற்றம் நடைபெறும். இவ்வரங்கேற்றத்திற்கு இசைமன்னர் ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை தலைமைவகிப்பார்.

திருவாளர்கள் ஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தசர்மா, ஏ. எஸ். இராமநாதன், கே. கணேசன் ஆகியோர் பக்கவாத்தியங்கள் வாசிப்பார்கள். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான், திரு. வீரமணி ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். ஸ்ரீ சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, திரு. எஸ். பரம்தில்லைராஜா ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

...தர்மலிங்கம், ச. மணிசுந்தரம்.

17பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அந்தோனியார் சொரூபம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை சேந்தான்குள மீன்பிடித்துறையில் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக அந்தோனியாரின் 7 அடி உயரமான சொரூபமொன்று உயர்ந்த தூணில் நிறுவப்பட்டுக் கடலை நோக்கிய வண்ணம் காட்சியளிக்கிறது. ஒரு கையில் கிறிஸ்துடன் பாடுபட்ட சிலுவையும் மறு கையில் ஒரு புத்தகத்தையும் கொண்ட இச்சொரூபம் கடலிலிருந்து அதிக தூரத்திற்குத் தெரிகிறது

# "ஐந்து ஏக்கர் நிலத்துக்கு மேல் எவரும் வைத்திருக்க முடியாது"

## இப்படி ஒருசட்டம் விரைவில் வருமென்கிறார் கம்யூ. பிரமுகர்

உடுப்பிட்டி-புலோலி, வெள்ளி

'பற்றற்ற மக்கள் மத்தியில் புரட்சியை உண்டாக்க இயலாது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இரண்டு லட்சம் இளைஞர்களுக்கு வேலைகொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை மீது போராட்டம் நடத்தவேண்டும் நிலப்பிரபுத்துவ முறையை ஒழித்தால்தான் சாதிப் பாகுபாட்டையும் ஒழிக்க முடியும். ஐந்து ஏக்கர் நிலத்திற்கு மேல் எவரும் வைத்திருக்க முடியாது என்ற சட்டம் விரைவில் அமுல் செய்யப்படவிருக்கின்றது'

இவ்வாறு 'வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு. பொன். குமாரசமி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உடுப்பிட்டிப் பிராந்தியக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வழக்கறிஞர் திரு. சிவா. பாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. திரு. பொன். குமாரசாமி மேலும் கூறியதாவது-:

'ஆங்கிலேயர் எமது நாட்டைச் சுரண்டிச் சென்றுவிட்டனர். 85 தேசிய வரம்புத் தோட்டங்களை நம்பி இந்தியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். 150 வருடங்களாக ஆங்கிலேயர் இந்தியத் தொழிலாளர்களை வைத்துத் தங்கள் நாட்டிற்கு எமது பணத்தைக் கடத்தியுள்ளனர்.

ஜனநாயகத்தின் பொறுப்புடன்தான் இங்கிலாந்து ஜனநாயகத்தை ஏற்க நாம் தயாராகவில்லை, மக்களால் ஏற்படுத்தப்பட்டது தான் ஜனநாயகம். இந்த அரசாங்கம் வந்தபின்தான் குடியரசாக்க முன்வந்தது. புரட்சி என்பது புதியது வருவதும், பழையது போவதுமாகும், எங்களுடைய சக்திகளை முன்னேற்ற வேண்டுமென்றால் வெறும் புரட்சிகளைப் பேசுவதால் பயனில்லை. ரட்சிகளை உண்டாக்குவது தான் முதற்கடமை. சோஷலிஸப் புரட்சிக்கும், நாடற்ற புரட்சிக்கும் சோஷலிஸம் என்று சொல்வதால் பயனில்லை'

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னாதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

வரதர் வெளியீடு
5-ம் வகுப்புக்கு
மூன்றும் தவணைக்காலத்தில் உபயோகிக்கத் தகுந்த சிறந்த மாதிரி வினாப் பத்திரங்கள். பாடத்திட்டம் முழுவதையும் அடக்கியுள்ளதால் நல்ல மீட்டற் பயிற்சிகளுமாம். பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற மிக உதவியானவை.
சிறந்த அனுபவமிக்க ஆசிரியை
திருமதி
பத்மா சோமகாந்தன்
எழுதியவை.
புதிய பதிப்புகள்!

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் | சதம் | 70 |
| 2. | சூழல் | '' | 70 |
| 3 | கணிதம் | '' | 70 |
| 4. | ஆங்கிலம் | '' | 70 |
| 5. | சைவசமயம் | '' | 70 |

தொகையாக வாங்குவோர்க்கு கழிவுண்டு.
ஆனந்தா
அச்சகம்—புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யு. எஸ்., மே. ஜெர்மன், பிரிட்டன், சுவிஸ், இஸ்ரேல்

# கொமாண்டோ நிபந்தனைக்கு இணங்க ஐந்து நாடுகளும் மறுப்பு

## விமானப் பிரயாணிகளை முதலில் விடுதலைசெய்ய மாற்று நிபந்தனை

பேர்ன், செப்டம்பர் 11

**ஜோர்டான் பாலைவனத்தில் அரபுக் கொமாண்டோக்கள் பலவந்தமாகத் தரை இறக்கியுள்ள மூன்று விமானங்களிலுமுள்ள பிரயாணிகளை விடுதலை செய்வதற்கு அவர்கள் விடுத்த நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் நிராகரித்துவிட்டன.**

**மேற்கு ஜெர்மன், பிரிட்டன், அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்து, இஸ்ரேல் ஆகிய ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்ன் நகரில் கூடி இந்த முடிவை எடுத்தன.**

இந்த நாடுகளில் சிறைப் பிடித்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்க கொமாண்டோக்கள் விடுவிக்கப்படாவிட்டால் தாங்கள் காவலில் வைத்துள்ள விமானங்களை பிரயாணிகளுடன் சேர்த்து வெடி வைத்துத் தகர்த்துவிடப் போவதாக அரபுக் கொமாண்டோக்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இவர்கள் விடுத்த நிபந்தனைகளுக்கு இணங்குவதாக மேற்கு ஜெர்மனியும், சுவிட்ஸர்லாந்தும் ஏற்கனவே இணங்கியிருந்தன, ஆனால் பின்னர் மற்றநாடுகளுடன் ஆலோசித்தபின் இந்தமுடிவை அவைமாற்றிக்கொண்டுள்ளன.

இந்த நாடுகளில் சிறை வைக்கப்பட்டுள்ள கொமாண்டோக்களை விடுவிப்பதற்கு மாற்று நிபந்தனைகள் சிலவற்றையும் அவைகள் தெரிவித்துள்ளன.

பாலைவனத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரயாணிகள் அனைவரும் முதலில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது. இதே போன்ற கோரிக்கையை இஸ்ரேலும் விடுத்திருக்கின்றது. விமானங்களிலுள்ள பிரயாணிகள் அனைவரும் முதலில் விடுதலை செய்யப்பட்டவுடன் தாம் சிறையில் ...

...ரையும் மனிதாபிமானத்தின்பேரால் விடுதலை செய்யுமாறு ஈராக் அரசாங்கம் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

கொமாண்டோக்களின் நிபந்தனைகளுக்கு சம்பந்தப்பட்ட ஐந்து நாடுகளும் தெரிவித்துள்ள மாற்று நிபந்தனைகள் அம்மானிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி மூலம் அரபுக் கொமாண்டோக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் விமானம் திசை திருப்பப்பட்ட பொழுது கொமாண்டோக்கள் ஆகாயத்திலேயே விமானத்தைத் தகர்த்துவிடப் போவதாகவும், அதற்குமுன் சிறைவைக்கப்பட்டுள்ள அரபுக்கொமாண்டோக்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கொரில்லாக்கள் அறிவித்தனர். பின்னர் விமானங்கள் இரண்டை ஜோர்டான் பாலைவனமொன்றில் முன்னர் பிரிட்டிஷார் உபயோகித்துவந்த கைவிடப்பட்ட விமான இறங்குதுறையில் இறக்கி பிரயாணிகளைக் காவலில் வைத்தனர். மேற்குறித்தநாடுகளில் காவலில்வைக்கப் பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்களை விடுவிக்கும் படியும் குறிப்பிட்ட நேரத்துக்குள் அவர்களை விடுதலை செய்...

...கெடு நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தனர்.

இப்பொழுது இவர்களின் நிபந்தனைகளுக்கு சம்பந்தப்பட்ட ஐந்து நாடுகளும் மாற்று நிபந்தனைகளை விதித்திருப்பதால் கொமண்டோக்கள் என்ன நடடிக்கைகள் எடுப்பார்கள் என்று தெரியவில்லை.

இந்த நாடுகள்விடுத்துள்ள கோரிக்கைகளுக்கு கொமாண்டோக்கள் இணங்குவார்களா அல்லது தாங்கள் முன்னரே அறிவித்திருப்பது போல் பிரயாணிகளுடன் விமானங்களைத் தகர்த்தெறிவார்களா என்று எதுவும் கூற முடியாமலிருக்கின்றது. இவர்களால் திசைதிருப்பப்பட்டுள் விமானங்களில் பல்வேறுநாட்டவர்களும் இருப்பதால் இந்த நாடுகளில் எல்லாம் அரபுக் கொமாண்டோக்களுக்கு இருந்துவந்த ஆதரவு ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது விமானங்கள் பிரயாணிகளுடன் தகர்க்கப்பட்டால் ஏற்கனவே இவர்களுக்கு இருந்து வந்த ஆதரவுமேலும் மோசமாகப் பாதிக்கப்படலாம் என்று கொமாண்டோக்கள் கருதுவார்களானால் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரயாணிகள் அனைவரையும் விடுதலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது ...

காவலிலுள்ள

### பெண்மணி பிரசவித்தார்

அம்மான், செப். 11

ஜோர்டான் பாலைவனத்தில் அரபுக் கொமாண்டோக்கள் பலவந்தமாகத் தரையிறக்கி காவல் புரிந்து வரும் மூன்று விமானங்களில் ஒன்றின் பிரயாணியான அமெரிக்கப் பெண்மணியொருவருக்கு குழந்தை பிறந்திருக்கிறது. இத்தகவல் இன்று இங்கு கிடைத்தது.

### கொரில்லா தலைவர் கைது

ஜெருசலேம், செப். 11

இஸ்ரேல் நாட்டில் நாசவேலைகளில் ஈடுபட்டுவருபவராகக்கருதப்பட்ட கொரில்லாத் தலைவர் திரு. ரம்ஸட் காசாப்பகுதியில் இன்று இஸ்ரேலியப் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

— —

### சந்திரப்பாறையில் மிகப் பழைய கனிஜப் பொருள்

வாஷிங்டன், செப். 11

சந்திரப் பயணத்தின் போது அமெரிக்க விஞ்ஞானிகளால் கொண்டுவரப்பட்ட சந்திரக்கற்பாறைத் துணுக்குகளில் மிக பழைமையான கனிப்பொருள் உண்டென [illegible]ராய்ந்து கண்டுபிடிக்கப் [illegible]டுள்ளது.

மேற்படி பாறைத் துணுக்குகளை ஆராய்ந்த அவுஸ்திரேலிய விஞ்ஞானி ஒருவர் இந்[illegible] ...

### பழமையைப்பாதுகாக்க தயங்கக் கூடாதாம்!

#### காமகோடி பீடாதிபதி உபதேசம்

காஞ்சிபுரம், செப். 10

"பழைமையைப் பாதுகாக்கச் சிறிதும் தயங்கக் கூடாது. நம்மிடைவர்ணாச்சிரமம் போன்ற பாகுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றிக்கிடையேயும் ஒற்றுமை காண்பதுதான் சிறந்த பண்பாகும்."

இவ்வாறு ஆகமசில்ப வியாஸ பாரதி கலாதி வித்வத்சதஸ் சமாஜத்தின் ஆதரவில் நடைபெற்ற 9-வது சதாஸ் விழாவை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த விழா வருடந்தோறும் நடைபெற்று வருகிறது. 9 ஆண்டுகளுக்கு முன் காஞ்சி ப்ரமாச்சாரியாளின் ஆசியுடன் தொடக்கப்பட்டது. இந்த விழாவில் சைவ-வைணவ வேற்றுமையின்றி இந்த இரு மதங்களையும்சேர்ந்த பண்டிதர்கள் சொற்பொழிவுகள் விவாதங்கள் நடத்துவர். இது இந்த விழாவுக்குரிய சிறந்த அம்சமாகும்.

இவ்விழாவில் திரு. என். கிருஷ்ணசாமிரெட்டியார், திரு. கே. எஸ். நரசிம்மன் ஆகியோரும் கலந்து உரையாற்றினர்.

செப்டம்பர் 1-ந் திகதியிலிருந்து 15-ந் திகதி வரை 'ஆலயங்களைச் சுத்தப்படுத்தும் வாரம்' கொண்டாடுமாறு பொதுமக்களை அறநிலைய கமிஷனர் திரு. கே. எஸ். நரசிம்மன் கேட்டுக்கொண்டார்.

### வைணவம் பற்றிய ஆராய்ச்சி

காஞ்சி காமகோடி பீடம் சிறிய பெரியவாள் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் தலைமையில் ஆகம பண்டிதர்களின் ஆராய்ச்சி உரைகள் நடைபெற்றன. முதலில் 'சிவகாமம்' பற்றி ஆராய்ச்சி உரைகள் நிகழ்ந்தன. அடுத்து சங்க இலக்கியத்தில் வைண[illegible] என்பது பற்றிய உரை[illegible]நிகழ்த்தப்பட்டது.

"பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் திரு[illegible] பற்றிய உவமைகள் ஏராளமாக வரு[illegible]றன. பரிபாடலில் திருமால் முழு...

### கெனமன் இந்தியா விஜயம்

கோட்டை, வெள்ளி



வீடமைப்பு அமைச்சரும் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) தலைவருமான திரு. பீற்றர்கெனமன், ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குச் செல்வார். இந்திய அரசின் அழைப்பை ஏற்றுச் செல்லும் இவர் அங்கு ஒருவார காலம் தங்குவார்.

--

### வட இலங்கை த.ஆ.சங்க 5ம் தரப்பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் நடத்தும் 5ம் தரப்பரீட்சை நவம்பர் 12ம் திகதி நடைபெற விருப்பதாகவும், இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்றும், பரீட்சை நிலையங்கள் சங்கத்தின் அவ்வப் பகுதிக் கிளைக்காரியதரிசிகளின் ஆலோசனையுடன் பழைய முறைகளை ...

### இஸ்ரேல்மீது பொருளாதார நிர்ப்பந்தம்

#### லூசாக்கா மகாநாடு தீர்மானம்

லூசாக்கா, செப் 11

இஸ்ரேல் தான் கைப்பற்றிய அராபியப் பிராந்தியத்திலிருந்து வெளியேறுவிட்டால் அதற்கெதிராக ஐ. நா சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இஸ்ரேல் மீது பொருளாதார நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் லூசாக்காவில் நேற்று நடந்துமுடிந்த மூன்றுவது நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

அமைதி விடுதலை சமாதானம் ஆகிய மனித முன்னேற்ற நடவடிக்கைகளுக்காக நடுநிலைமை நாடுகள் ஒன்றுபட்டுழைக்க வேண்டும். மேற்காசியா தென் ஆபிரிக்கா மத்திய கிழக்குப் போன்ற இடங்களில் நடைபெறும் பிரச்னைகளுக்கு அமைதித் தீர்வுகாண நடுநிலைமை நாடுகள் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து ஐ. நா. சபை எடுத்த தீர்மானத்திற்கு எதிராக பிரிட்டன் மேற்கு ஜெர்மனி போன்றவை நடந்துகொள்ளும் முறையை இம் மகாநாடு வன்மையாகக் கண்டித்தது.

நடுநிலைமை நாடுகளுக்கென ஒரு நிரந்தர செயலகம் அமைக்கப்பட வேண்டுமெனக் கோரும் பிரேரணை நிராகரிக்கப்பட்டது,

நாடுகளுக்கிடையே உள்ள எல்லைகளை மதிப்பதோடு அந்நாடுகளின் பொருளாதாரசுதந்திரத்திற்காக பாடுபடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தோசீனவில் ஐ. நா சபையின் தீர்மானத்திற்கு முரணாக அமெரிக்கா நடந்துகொள்வது கண்டிக்கப்பட வேண்டியது. இந்தோசீனவில் இவர்களுடைய தலையீட்டினால் அமைதிகெட்டு மக்கள் மிகவும் துன்புறுகிறார்கள் என மாநாடு கருதியது.

நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாடுநல்ல பயனைத் தந்திருக்கிறது. இதுபோன்று அடிக்கடி மக நாடுகள் கூட்டப்படவேண்டுமென யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ கேட்டுக்கொண்டார்.

உலகின் அமைதிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் நாம் ஒன்றுபட்டிருக்கிறோம். குடியேற்ற ஆதிக்கம் ஏகாதிபத்தியம் என்பனவற்றிற்கு எதிராக இருப்பதோடு உலகில் வன்முறைகள் நடப்பதையும் நாம் எதிர்க்கிறோம். சிறிய நாடுகளின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டுமென இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி கூறினார்.

இம் மகாநாட்டின் இறுதியில் சாம்பியா ஜனாதிபதி கவுண்டா புரட்சி விடுதலைப் பாடல் ஒன்றைப் பாடியபின் உலக அமைதிக்காகவும் உயர்வுக்காகவும் ஒன்றுபட்டிருக்கிறோம். எமது நாடுகளின் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறினார். இந்திராகாந்தி இந்தியா திரும்புகையில் நைரோபித் தலைவர் கென்யாட்டாவைச் சந்திப்பார்.

### 'சமூக அபிவிருத்தி ஸ்தாபனங்கள்'

#### உள்ளூராட்சி அமைச்சர் திட்டம்

கோட்டை, வெள்ளி

உள்ளூராட்சிமன்ற உள்ளூர் விவகார பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா இன்று லூசாக்காவிலிருந்து மேற்கு ஐரோப்பா ஸ்கண்டிநேவிய நாடுகளுக்குப் புறப்படுகிறார். இலங்கையின் கிராமப்புறங்களின் அபிவிருத்தியையிட்டு அமைச்சர் ஏற்கனவே தீட்டியுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மேற்படி நாடுகளிடமிருந்து நிதியுதவி கோரவே இந் நாடுகளுக்கு விஜயம் செய்கிறார்.

திரு பண்டாரநாயக்கா ...

இந்த நிறுவனங்களுக்கு அவ்வப் பகுதிகளிலுள்ள மக்கள் மத்தியிலேயேயிருந்து அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அரசாங்கமும் தனியார் ஸ்தாபனங்களும் இந்தக் கிராம அபிவிருத்தி ஸ்தாபனங்களுக்கும் ஒத்துழைப்பு அளிப்பனவாகவிருக்கும். இந்தச் சமூகவளர்ச்சிஸ்தாபனங்கள் லாபம் பெறும் சாதனங்களாக அமையாது.

— —

### சுற்றிச் சுற்றியும்!

உடுப்பிட்டி, வெள்ளி

...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...வித்திருக்கின்றது. இதே போன்ற கோரிக்கையை இஸ்ரேலும் விடுத்திருக்கின்றது. விமானங்களிலுள்ள பிரயாணிகள் அனைவரும் முதலில் விடுதலை செய்யப்பட்டவுடன் தாம் சிறையில் வைத்துள்ள அரபுப்பெண்ணை விடுதலை செய்வதாக பிரிட்டன் அறிவித்திருக்கின்றது

பாலைவனத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள விமானப் பிரயாணிகள் அனைவ...ணிகளைக் காவலில் வைத்தவர். மேற்குறித்த நாடுகளில் காவலில்வைக்கப் பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்களை விடுவிக்கும் படியும் குறிப்பிட்ட நேரத்துக்குள் அவர்களை விடுதலை செய்யாவிட்டால் பிரயாணிகளுடன் திசை திருப்பப்பட்டவிமானங்கள் தகர்த்தெறியப்படும்என்றும் அவர்கள் அறிவித்தனர். பின்னர் முதலில் தாம்விதித்த காலக்...பாதிக்கப்படலாம் என்று கொமாண்டோக்கள் கருதுவார்களானால் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரயாணிகள் அனைவரையும் விடுதலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

## விமானப் பாதுகாப்புக்கு அதிபர் நிக்ஸன் ஏற்பாடு

அமெரிக்க விமானங்களில் விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது பற்றி அதிபர் நிக்ஸன் விரைவில் அறிக்கையொன்றை விடுப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது: விமானங்களில் காவல் ஏற்பாடுகளைப் பலப்படுத்துவது பற்றியும், 'எலக்ரோனிக்' சமிக்ஞைக் கருவிகளை எல்லா விமானங்களிலும் பொருத்திவிடுவது பற்றியும் அவர் புதிய உத்தரவுகள் பிறப்பிக்கக்கூடுமென்றும் கருதப்படுகிறது

இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கொல்டா மெயர், அடுத்த வாரம் நியுயோர்க் சென்று அதிபர் நிக்சனைச் சந்திப்பாரென்று இப்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றது.

## இந்தியத் தலைவர்களுக்கு முன்னாள் தளபதி எச்சரிக்கை

புதுடில்லி, செப். 11

நாட்டிலுள்ள தலைவர்கள் இப்பொழுது நடந்துகொள்ளும் முறையில் தொடர்ந்தும் நடப்பார்களானால் மக்கள் தங்கள் சகிப்புத் தன்மையை இழப்பதோடு தலைவர்கள்மீது நம்பிக்கை இழந்து வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தொடங்கி விடுவார்கள் என எல்லாக் கட்சித் தலைவர்களையும்முன்னாள் இராணுவத் தளபதி குமாரமங்கலம் எச்சரித்துள்ளார்.

'இந்தியாவில் ஆட்சிமன்ற ஜனநாயகத்தின் எதிர்காலம்' என்பதுபற்றி 'திஸ்ரேற்றஸ்' என்ற சஞ்சிகையில் எழுதும்பொழுதே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் அக்கட்டுரையில் அரசியல் தலைவர்கள் விரைவில் திருந்திக்கொள்வது நல்லது. அரசியல் வாதிகள் தங்கள் நலனில் அக்கறை உடையவர்களாய் இருக்கிறார்களே தவிர நாட்டு நலனில் அக்கறையில்லை. வகுப்பு. ஜாதி, பிராந்திய உணர்வுகளால் இவர்கள் பிரபலமடையப் பார்க்கிறார்கள். உற்பத்திப் பெருக்கினாலேயே பொருளாதாரம் அபிவிருத்தியடைய முடியுமென்பதை இத்தலைவர்கள் உணர்வதாயில்லை: இன்று நம்மதியிலுள்ள குறைகளுக்கு அரசியல் சாஸனத்தைகுறைகூறமுடியாது. மக்களுக்கு தாங்கள் சேவைசெய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மறந்து, சட்டசபை, பார்லிமெண்ட் மெம்பர்கள் எதிர்காலத்தில் வருவார்கள் என்பதை அரசியல் சாஸனத்தை வகுத்த அறிஞர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வாக்காளரும் தம் பொறுப்பை உணர்ந்து நடக்காமல் இருப்பார்கள் என்பதையும் உணர்ந்திருக்கமாட்டார்கள்.

நாட்டிலுள்ள கட்சிகள் தொழில்களில் கட்டுப்பாடின்மையைத் தூண்டுகின்றன. நிலப்பறி போன்ற இயக்கங்கள் மூலம் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுமாறு தூண்டுகிறார்கள். நிலம் இல்லாத எல்லோருக்கும் நிலம் அளிக்கமுடியாது நக்சல்பாரிகளைக் கண்டிப்பவர்கள் அவர்களது செயலையே பின்பற்றுகிறார்கள். இவர்களுடைய நடவடிக்கை சந்தர்ப்பவாதமாகும் ஜனநாயக அரசாங்கத்திற்கு திருப்திகரமான மாற்றுக் கிடையாது ஜனநாயகத்திற்குள்ள மாற்று நிபுணர் குழுவைக்கொண்டு ஆட்சி நடத்துவது சர்வாதிகாரமேயாகும். தற்காலிக ராணுவ ஆட்சியையோ, தேர்ந்தெடுக்கப்பட்ட விசேட குழு மூலம் ஜனாதிபதி ஆட்சி நடத்துவதையோஎன்னால் ஆதரிக்க முடியாது என்வும் எழுதியுள்ளார்'

ஏழாலை தெற்கு

## இந்து சமய விருத்திச்சங்கம்

யாழ்ப்பாணம் சனி

ஏழாலை தெற்கு மேற்கு இந்துசமய அபிவிருத்திச்சங்கத்தின்12-ம் ஆண்டுநிறைவு விழர ஏழாலைச் சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் திரு. மு. சிற்றம்பலம் தலைமையில் கொண்டாடப்பட்டது.

காரியதரிசி நா. இரத்தினமும் உதவித் தனாதிகாரி திரு வ. பேரின்பநாயகமும் தமது ஆண்டுஅறிக்கையைச்சமர்ப்பித்தார்கள்.

செல்விகள் சத்தியபாமா பே. அருட்சோதி; இ.இராசமலர் சு. ஶ்ரீமாவா, க. கலாதேவி, இ. இன்பவதனம் செல்வன் இ. நல்லரத்தினம் ஆகியோர் பேசினார்கள்.

ஆசிரியர் திரு ச, விநாயகமூர்த்தியும் பேசினார்,

திரு வி. ரி. சுப்பிரமணியத்தின்மாணவர்களின்தேவாரப் பண்ணிசையும் இடம்பெற்றது சமயஎழுத்துப்போட்டி தேவாரப்போட்டி, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு தலைவர் பரிசு வழங்கினார். பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்.

தலைவர் மு. சிற்றம்பலம், உபதலைவர்கள் ஐ. பேரம்பலம் த சிவலிங்கம் செ.சின்னத்துரை. இணைக் காரியதரிசிகள் நா. இரத்தினம் சிகந்தையா, உதவிக்காரியதரிசி; ச. செல்வரத்தினம், தனாதிகாரி வ.பேரின்பநாயகம். நிர்வாகசபையினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பிரசங்கங்கள்

தாவடி, வெள்ளி

தாவடி வடக்கு குழந்தை சிட்டிக் கணையன்வளவு ஶ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் சங்காபிஷேக விழாவை முன்னிட்டு தினமும், சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் நடாத்தப்பட்டுவருகின்றன.

உடுப்பிட்டி, வெள்ளி

அல்வாய், மாலிசந்தியிலுள்ள மார்க்கண்டு என்பவருக்குச் சொந்தமான வீடு தீக்கிரையானது. சிறுவன் குப்பிவிளக்குடன் விளையாடும்போது இத்தீவிபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

...டுள்ளது.

மேற்படி பாறைத் துணுக்குகளை ஆராய்ந்த அவுஸ்திரேலிய விஞ்ஞானி ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

[illegible]மியில் இருப்பதைவிடச் சந்திரக் கற்பாறைகளில் கூடுதலான யூரேனியம் உண்டென்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திரா இலங்கை வருவார்

கோட்டை, வெள்ளி

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

லுசாக்காவில் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவோடு சிறிமாவோ சாஸ்திரி உடன்படிக்கையை நல்லமுறையில் செயல்படுத்துவது குறித்து பாரதப்பிரதமர் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடாத்துவதற்காகவே திருமதி இந்திராகாந்தி இங்கு வருகிறார்.

லுசாக்காவில் நடைபெறும் நடுநிலைமைகள் மகாநாட்டில் இருந்து திரும்பிய பின்னரோ அல்லது ஒக்டோபர் 24-ல் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் வெள்ளி விழாவில் கலந்துகொண்டு விட்டு திரும்பிய பின்னரோ திருமதி இந்திராகாந்தி இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது

...பது பற்றிய உரை[illegible]கழ்த்தப்பட்டது.

''பத்துப்பாட்டு. எட்டுத்தொகை நூல்களில் திருமாலைப் பற்றிய உவமைகள் ஏராளமாக வரு[illegible]றன. பரிபாடலில் திருமால் முழுமுதற் கடவுளாகக் குறிப்பிட்டிருக்கிறார். திருமாலை அதுபோல் விவரிக்கும் பிறநூல்கள் மிகக் குறைவு.''

இவ்வாறு திரு. நாராயணசாமிப்பிள்ளை தமது உரையில் குறிப்பிட்டார். திரு. என். எஸ். தாதாச்சாரியார் பேசுகையில், தொல்காப்பியமே முல்லை நிலத்திற்கு கடவுள் திருமால் என வகுத்துக் கூறியிருப்பதை எடுத்துக் காட்டினார். தொல்காப்பியத்திற்குப் பின் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் வைணவத்தைக் கம்பீரமாக எடுத்துச் சொல்கின்றன என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:

''பிற சமயங்களைத் தாக்காது வைணவத்தின் பெருமையை இந்த நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. பண்டைக்காலத்தில் தந்தை ஒரு மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தால் மகனும் அதே மதத்தை தழுவவேண்டுப் என்ற நிர்ப்பந்தம் இல்லை. இளவழுதி என்ற பாண்டியன் வைஷ்ணவனாக இருந்தான். அவனுடைய சந்ததியினர் சைவ சமயத்தைத் தழுவினர்.''

...தாகவும், இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்றும், பரீட்சை நிலையங்கள் சங்கத்தின் அவ்வப் பகுதிக் கிளைக்காரியதரிசிகளின் ஆலோசனையுடன் பழைய முறைகளை அனுசரித்துத் தீர்மானிக்கப்படுமென்றும் சங்கப் பரீட்சைக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

5ம் தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு கல்வித் திணைக்களத்தாரின் பாடத் திட்டத்திற்கு அமையவே வினாக்கள் தயாரிக்கப்படுவதாகவும், தமிழ், எண்,சூழல்,சமயம், ஆங்கிலம் ஆகிய ஐந்து பாடங்கள் பரீட்சையில் இடம் பெறுமென்றும் தெரிவித்துள்ள பரீட்சைக் காரியதரிசி, பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகவும், கடந்த ஆண்டுகளைப் போலவே எல்லாப் பாடசாலை அதிபர்களும் இப்பரீட்சைகுத் தம்மாலான ஒத்துழைப்பும் நல்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

...அமைச்சர் ஏற்கனவே தீட்டியுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மேற்படி நாடுகளிடமிருந்து நிதியுதவி கோரவே இந் நாடுகளுக்கு விஜயம் செய்கிறார்.

திரு பண்டாரநாயக்காவின் மேற்படி பெரிய திட்டத்தின் பிரதான அம்சம் கிராமப்புறங்களில் வேலையில்லாப் பிரச்சினையைஒழிப்பதாகும். சமூக அபிவிருத்திஸ்தாபனங்களின் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்கவும் கிராமப் பொருளாதாரத்தையும் வளர்க்கவும்அமைச்சர் பீலிக்ஸ் திட்டமிட்டுள்ளார்.

...னங்கள் லாபம் பெறும் சாதனங்களாக அமையாது.

## சுற்றிச் சுற்றியும்!

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் மணியகாரன் தோட்டம் சைவப்பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர் திரு. எஸ். தாமோதரம் பிள்ளை முதலில் அல்வாய் ஶ்ரீலங்கா வித்தியாசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டு பின்னர் அவ்விடமாற்றம் நிறுத்தப்பட்டு வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலைக்கு மாற்றம்செய்யப்பட்டார்.

இப்போது பிரஸ்தாப ஆசிரியரின் இந்த இடமாற்ற உத்தரவும் ரத்துச்செய்யப்பட்டு மீண்டும் கரணவாய் மணியகாரன் தோட்டம் சைவப்பாடசாலைக்கே மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## விமான திசை திருப்புதலை அமெரிக்கா தடுக்கும்

நியூயோர்க், செப். 11

விமானங்களைத் திசை திருப்பும் நடவடிக்கையை தடுக்கும் நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்கவிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதியும் உயர் அதிகாரிகளும் கூடி இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியபின்பே இந்நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது, ஆனால் எவ்விதமான நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிவிக்கவில்லை பொதுவாக விமான நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதோடு, விமானங்களில் மின் அணு கண்காணிப்புக்களைஏற்படுத்தலாம் என அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்தன.

கொமாண்டோக்களின் இவ்விதமான செயல், அரபு மக்களுக்கு உலகமக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுத்தராது என சோவியத் ஸ்தாபனம் 'டாஸ்' எகிப்திய குறிப்பைச் சுட்டிக்காட்டியது

இப்பொழுது கடத்தப்பட்ட பி. ஓ. ஏ.சி. விமானத்திற்கு பிரிட்டனில் சிறை வைக்கப்பட்டுள்ள அராபியப் பெண்மணி லைலாகாதிக்கின் பெயர்கூட்டப் பட்டுள்ளது.

இதுவரையும் ஜோர்டானில் தங்கியுள்ள கடத்தப்பட்ட விமானங்களில் பிரயாணம் செய்தவர்களின் எண்ணிக்கை 300 ஆகியுள்ளது.

## தூக்குக்காவடியும் தீக்குழிப்பும்

நெல்லியடி, வெள்ளி

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடைக்காடுவாசியான திரு.க.வல்லிபுரம் தூக்குக்காவடி எடுத்து தனது நேர்த்திக்கடனை முடித்தார். அத்தோடு கோயிலின் முகப்பில் இரண்டு பெண்கள் உட்பட பலர் தீக்குளித்தார்கள் இன்று தொடக்கம் தீர்த்தத் திருவிழாவரை மக்களின் நலனை முன்னிட்டு விசேட பொலிசார் கடமையாற்றுகின்றனர்.

## றேட்ஸ் புலமைப் பரிசில்

கோட்டை, வெள்ளி

இலங்கையின் 5-வது றேட்ஸ் புலமைப் பரிசில் தெரிவுநவம்பர்மாதம் நடைபெறஇருக்கிறது. இப்பரிசில் பெறும் மாணவனுக்கு இரண்டு வருடங்களுக்கு 2400 பவுன் கொடுப்பதுடன் இரண்டு வருடங்கள் 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்தில் கல்வி பயில வாய்ப்பளிக்கப்படும். இரண்டு ஆண்டிலும் இவருடைய கல்வித் தகைமையைப் பரிசீலித்தபின் உபகாரச் சம்பளம் மேலும் ஓராண்டு நீடிக்கப்படும்.

இப்புலமைப் பரிசில் தெரிவு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைநடைபெறுகிறது.

தி. மு. க. அரசுக்கு

## சுதந்திரா அளித்து வந்த ஆதரவு வாபசாகலாம்!

சென்னை, செப் 11

தி.மு.க வுக்கு சுதந்திரக் கட்சி இதுவரை காலமும் அளித்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கக் கூடுமெனத் தெரிய வருகிறது. மன்னர் மானிய ஒழிப்பு மசோதாவை ஆதரித்து வாக்களித்ததும், இந்திரா அரசை தொடர்ந்து ஆதரிப்பதுமே தி. மு. க வுக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்குக்காரணம்என அறியப்படுகிறது.

தமிழ்நாடு சட்ட சபையில் சுதந்திரக்கட்சி எம்,எல்.ஏ. திரு. சீமைச்சாமி தி.மு.க அரசின் மீது பல கண்டனங்களைத் தெரிவித்தார். அவர் ஆட்சி மன்றத்தில் பேசுகையில்,அரசாங்க உத்தியோகத்தில் தகுதி இல்லாதவர்களுக்கு பதவி உயர்வு அளித்திருக்கிறீர்கள். மாநில சுயாட்சியையும்,அதற்கென தனிக்கொடியையும் கோரியுள்ளீர்கள். மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கிற்குத் தொடர்ந்தும் நீங்கள் ஆதரவு கொடுத்தால், தி.மு.க அரசுக்கு நாங்கள் இதுவரை தந்த ஆதரவை வாபஸ் பெற வேண்டி ஏற்படும் என்றார்,

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி இதற்கு பதிலளிக்கையில் தலைவர் ராஜாஜியைக் கலந்து பேசியபின்பே நான் இதற்குபதில் சொல்ல முடியும். தலையிருக்க வால் ஆடுவது சரியல்ல. அப்படி சுதந்திரக் கட்சி இவ் வரசுக்குத்தரும் ஆதரவை வாபஸ் பெற்றால், அதனால் நஷ்டம் அடைவது நாங்களல்ல, சுதந்திராவே என்றார்.

ராஜ்ய மானிய ஒழிப்பு மசோதாவை தி.மு.க ஆதரித்தது. அதனுடன் எமக்குள்ள ஆதரவை துண்டிக்கத் தூண்டவே செய்யும். இவர்கள் ஆதரவினாலேயே டில்கி ராஜ்ய சபையில் சொற்ப பெரும்பான்மை வாக்கால் மன்னர் மான்ய ஒழிப்பு மசோதா வெற்றி பெற்றது அராஜகத்திற்கு தி.மு.க உடந்தையாக இருப்பது வருத்தத்திற்குறியதென ராஜாஜி குறிப்பிட்டுள்ளார்.

தி.மு க சுதந்திராக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு மேலும் விரிவடையலாம் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கள்ளமற்ற உள்ளத்தைப் பெற்ருல், இறைவன் மிக எளிதில் கிட்டுவான். கற்கள் இல்லாத நல்ல நிலத்தில் நடும் வித்து எளிதில் முளை கிளம்புவது போல். — ராமகிருஷ்ணர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 27-ந் திகதி (12-9-70)

## பொருளாதார ஒத்துழைப்பு

லுஸாக்காமகாநாட்டிலே இலங்கைப் பிரதமர் ஸ்ரீமா, அரசியல் ஞானத்துடன் செய்த அரியதோர் பிரசங்கத்தில் கூட்டுச்சேரா நாடுகள் எல்லாம் தொடர்ந்து தங்களுக்கிடையே பொருளாதாரத் துறையில் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தை சரியாக வற்புறுத்தினர். வல்லரசுகளின் போக்கைக் கண்டித்துப் பேசிவிட்டு கலைந்து விடுவதில் பயனில்லையென்றும், ஒரு நிரந்தரமான உப கமிட்டியை நியமித்து பொருளாதார விஷயங்களில் எவ்விதம் தாங்கள் ஒத்துழைக்கலாமென்பது பற்றி ஆலோசனை செய்து அதை நடத்திவைக்க வேண்டுமென்றுர். அவர் மட்டுமன்றி மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய ஸாம்பியாத் தலைவர் டாக்டர் கவுண்டாவும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் இதே விஷயத்தை அறிவுறுத்தினர்.

ஏகாதிபத்திய அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்ற அநேகமாக எல்லா நாடுகளின் பொருளாதாரமும், சம்பந்தப்பட்ட வல்லரசுகளின் நன்மைக்கான முறையிலேயே வகுக்கப்பட்டது. நம் இலங்கையும் இதற்கு விலக்கல்ல. தேயிலை, ரப்பர் முதலிய தோட்டப் பொருட்களிலேயே நமது பொருளாதாரம் தங்கியுள்ளது. தேயிலை விலையைப் பிரிட்டனும் அதன் சகாக்களும் குறைத்துவிடுமயின் இலங்கையின் பொருளாதாரம் சீர்குலையும். பிரதமர் ஸ்ரீமா கூறியதுபோல் ஏற்றுமதிச் சரக்குகளின் விலை வரவரக் குறைந்து வருவதால் இறக்குமதிப்பொருட்களின் விலை கூடிக்கொண்டே போகிறது. நமக்கு அதிக கஷ்டமின்றி அரசியல் விடுதலை அளித்தமைக்காக பிரிட்டனுக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டியதே. ஆனால் அரசியல் விடுதலை கிடைத்தாலும் ...ருள்களுக்கு நியாயமான குறைந்த அளவு விலைகளை நிர்ணயிக்கலாம். அவ்விதம் செய்யாமல் பொருளாதாரச் சுரண்டல்களைத் தொடர்ந்து நடத்துவதாயின், புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வல்லரசுகள் எப்படிப் பெறமுடியும்? அரசியல் விடுதலை அளித்தவர்கள் பொருளாதாரச் சுரண்டல்களைத் தொடர்ந்து நடத்துவதால்தான் லுஸாக்காவில் கூடியுள்ள நாடுகள் தங்கள் பொருளாதாரத்தைக் காத்துக்கொள்ள தங்களுக்குள்ளாக ஒத்துழைக்கவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதென்பது சுலபமன்று. வல்லரசுகளின் ஒத்துழைப்பையும் பெறக்கூடிய முயற்சிகளையும் செய்ய வேண்டும். உலக மக்களின் நன்மையிலேயே தங்கள் நன்மையும் தங்கியுள்ளதென்பதை வல்லரசுகள் உணரச்செய்தால், அவை மனம் மாறி பழைய சுரண்டல் நோக்கங்களை விட்டு, இனி நியாயபுத்தியுடன் நடந்துகொள்ளலாம். புதிதாக சுதந்திரம் அடைந்த ஆசிய ஆபிரிக்க நாடுகள் விழிப்படைந்துள்ளதையும் தங்கள் முன்னேற்றத்துக்காக தங்களிடை ஒத்துழைக்க முற்பட்டுள்ளதையும் லுஸாக்கா மூலம் வல்லரசுகள் உணர்ந்திருக்கவேண்டும். பிரித்தாளும் தந்திரங்களும், வர்ணவாதங்களும் அதிகம் பலிக்கமுடியாது. ஆகவே தாங்களும் வாழ்ந்து ஆசிய ஆபிரிக்க நாட்டு மக்களும் வாழக்கூடிய வகையில் வல்லரசுகள் இனி காரியம் செய்யுமென்றே நம்புவோம்.

அதற்கிடையே கூட்டுச்சேரா நாடுகள் அடிக்கடி கூடிப்பேசி, பொருளாதார ஒத்துழைப்புக்கானவழிவகைகளைச் செய்தல் அவசியம்

# தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சிக்கு திருஷ்டியா?

தமிழக சட்டசபையிலே தி. மு. க. அரசின் மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்பார்த்தபடியே தோற்றது. 133 பேர் எதிர்த்தும், 29 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர். 23 பேர் நடுநிலைமை வகித்தனர்.

பிரேரணை கொண்டுவந்த பழைய காங்கிரஸ் கட்சியினரும் தங்கள் தீர்மானம் நிறைவேறுமென்று கருதியிருக்கமுடியாது.

ஆனால் இந்தக் கண்டத்துக்கு தி. மு. க. ஆட்சியினர் தப்பினரென்ருலும் இந்த ஆட்சி இப்போது பலவீனமடைந்துள்ளதாகத் தெரிகிறது. மூன்று அமைச்சர்கள் (திருவாளர்கள் கே. ஏ. மதியழகன், என். முத்துசாமி, கே. வேழவேந்தன்) தங்கள் பதவியிலிருந்து விலகியுள்ளனர். மந்திரி பதவியிலிருந்துதான் விலகியுள்ளனர். கட்சியிலிருந்தோ, சட்டசபையிலிருந்தோ விலகவில்லை. பிரிந்தவர்கள் மீண்டும் அண்ணாவின் பெயரால் கூடலாம். ஏற்கனவே பிரிந்திருந்த நெடுஞ்செழியன் அவர்கள் மீண்டும் முதல் அமைச்சருடன் சேர்ந்து ஒத்துழைத்ததுபோல். இந்தத்தடவையும் மேற்குறித்த மூவரும் மீண்டும் சேருவது அசாத்தியமல்ல.

ஆனால் இதைவிட பெரிய அதிர்ச்சி ராஜாஜியின் ஆதரவை தி. மு. க. ஆட்சியினர் இழந்ததுதான். அவரது சுதந்தராக் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்ப்பதற்குப் பதில் நடுநிலைமை வகித்தார்கள். சென்ற 1967-ம் வருட பொதுத்தேர்தலில் தி. மு. க. கட்சியைப் பூரணமாக ஆதரித்த ராஜாஜி இப்போது இந்த ஆட்சியை ஆதரிக்கவில்லை. காரணம் தலைமையிலே பிரதமர் இந்திராவின் ஆட்சியை தமிழகத்தின் தி. மு. க. முதல் அமைச்சர் கருணநிதி ஆதரிப்பதுதானும் சமஸ்தான மன்னர்களின் பென்ஷன் சலுகைகளை ஒழிப்பதற்கு தி. மு. க. கட்சியினரும் ஆதரித்ததால், ராஜாஜிக்கு மிகக் கோபம்.

ராஜாஜியின் கட்சி ஆதரிக்காவிடினும், கருணநிதியின் ஆட்சிக்கு உடன் ஆபத்து எதுவுமில்லை. ஆனால் தி. மு. க. கட்சிக்குள்ளாகவே கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டுள்ளதுதான் கட்சிக்கு ஆபத்து.

சென்ற பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கு மாருக தி. மு. க.வும் கம்யூனிஸ்ட், சுதந்தரா, பி. எஸ். பி., தமிழரசு முதலிய கட்சிகள் ஒரு கூட்டு முன்னணி அமைத்தன. ஆனல் இப்போது நிலைமை பெரிதும் மாறியுள்ளது. காங்கிரஸே பிளவுபட்டுள்ளது. தமது கருத்துக்கு மாருக நடந்துள்ள தி. மு. க. வுக்கு அடுத்த பொதுத்தேர்தலில் ராஜாஜியின் ஆதரவு கிடைக்குமா என்பது பெரிதும் சந்தேகம், வேறுகாரணங்களால் கம்யூனிஸ்ட், பி. எஸ். பி. முதலிய கட்சிகளும் தி. மு. க. ஆட்சியைக் கண்டித்தன. நிர்வாக ஊழல்களும் அடக்குமுறையும் அதிகமிருப்பதாகக் குற்றம் சாட்டின. இக்கட்சிகளும் இனி தி. மு. க. வை ஆதரிப்பது சந்தேகமே.

இந்தியாவிலேயே தமிழகம்தான் அதிக அமைதியாக இருப்பதாயும் ஆட்சியும் ஸ்திரமாக வுள்ளதாகவும் ஒரு புகழிருந்தது. அதற்கும் திருஷ்டி பட்டுவிட்டது போலும்.

உடனடியான இந்த ஆட்சிக்கு ஆபத்தில்லைதான் என்ருலும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் முதல் அமைச்சருக்கு பெரிய மண்டையிடியாகும்! இதை நல்லபடியாகத் தீர்ப்பதில்தான் கட்சிக்குள் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில்தான் அவரது எதிர்கால வெற்றியும் அடங்கியிருக்கும்.

அடுத்த மாதம் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இலங்கைக்கு வர ஒப்புக்கொண்டிருக்கிருர். இது மகிழ்ச்சியான செய்தி. பிரதமர் ஸ்ரீமா இலங்கையில் ஆட்சிசெய்யும் போது இந்தியப் பிரதமர் இந்திரா இங்கு வந்ததில்லை. இரு பெண்ணரசிகளும் இலங்கையில் கூடிப் பேசுவதன்மூலம் இரு நாடுகளுக்கும் நட்பும் நல்லுறவும் பலப்பட்டு, பிரயாணத்தடைகளும் குறைய வழிபிறக்குமென்று நம்புவோம்.

0 0 0

வீடமைப்பு அமைச்சர் கெனமன் அவர்கள் இந்தியாவுக்கு ஒருவாரம் சென்று அங்கு வீடமைப்பு வேலைகள் எவ்விதம் முன்னேறுகிறதென்பதைப் பார்வையிடப்போகிருர். சென்னை புதுடில்லி பம்பாய் இவ்விடங்களுக்கு சென்று பல விஷயங்களையும் நேரில் தெரிந்து கொள்வது இந்தியாவின் உதவியையும் கூடுமானவரைபெற்றுத் திரும்புவாரென்று நம்புவோம்.

இந்தியாவிலேயே தலைநகரங்களில் குடியிருப்புக் கஷ்டம் அதிகம் என்ருலும் இலங்கை உதவி கேட்டால் அதை இந்தியா மறுக்காது. இந்தியாவிலேயே இரும்புக்குத் தட்டுப்பாடாம். ஆனால் இலங்கை கேட்டதும் இந்தியா உடன் அனுப்பச் சம்மதித்தது. முன்னர் சீனி, சிமிந்தி இவற்றையும் இந்தியா கொடுத்துஉதவியுள்ளது. கூட்டுச்சேரா இவ்விரு அண்டை நாடுகளும் இனி ஒத்துழைக்க அதிக இடமுண்டு.

0 0 0

காதலாகிக் கசிந்து
கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்
குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்
பொருளாவது
நாதன் நாமம் நமச்சி
வாயவே.

—திருஞானசம்பந்தர்

## மணிலா சென்ருர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இலங்கையில் தலங்கம என்ற இடத்தைச் சேர்ந்த சங். தியோபினே ஜெயலத் மணிலாவில் உள்ள கிழக்காசிய சமய ஸ்தாபனத்தில் மறைக் கல்வி பயில்வதற்காக சென்றுள்ளார். இவர் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் கனிஷ்ட பாடசாலையின் அதிபராகப் பணி புரிந்தவர்.

......

# சுரங்கமல்ல; தரைக்கீழ் அருவிதானும்

## சாரணர் குழு கூறுகிறது

கொழும்புத்துறை, சனி

அண்மையில் ... கண்... சாலத்துச் சுரங்கப்பாதையல்லவென்றும் அது தரைக் ... சேற்று வழியில் சாரணர் குழு 350யார் தூரம் நூல் ... திசைகாட்டி ... என்பன ... ன் சென்றபோது 300

## பாப்பரசர் நன்றி

கோட்டை வெள்ளி

இலங்கைக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு கோரிவிடுத்த அழைப்பிதழுக்கு பாப்பரசர் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு நன்றி தெரிவித்துள்ளார். தான் அவ்...

## விவசாயப் புலம்

# நெல்லும் அமோனியம் சல்பேட்டும்

சென்ற வருடம் ஆவணி முதலாம் திகதியிலேயே தாராளமாகப் பெய்து கொடுத்துவிட்ட விதைப்பு மழை இவ்வருடம் 25 நாட்கள் கழித்தே யாழ்ப்பாணக் குடாநாட்டில் தோன்றியிருக்கிறது. அதுவும் நிலம் சரியாக நனையாதபடி தூற்றலாகவே பெய்திருக்கிறது. ஆழ உழுவதற்கோ மறுப்பதற்கோ முடியவில்லை. ஏற்கனவே வயல்களை உழுது குப்பை பரவி, ஓலை தாட்டு வைத்திருந்தவர்கள் விதைக்க ஆரம்பித்துவிட்டார்கள். விதைநெல் தாராளமாக வைத்திருந்தவர்கள் மழையைக் காண்பதற்கு முன்னமேயே மாமூல் முறைப்படி ஆவணி பதினைந்தில் புழுதி விதைப்பாக விதைத்து விட்டார்கள். மட்டுமட்டாக விதைநெல் வைத்திருந்தவர்கள் மழையைக் கண்ட பின்னரே விதைக்கின்றனர்.

மழை தாராளமாகப் பெய்து கொடுத்து இன்னும் இரண்டு மூன்று தினங்களில் முளைவிடப் போகும் பயிர்களை வளர்த்துவிடும் என்பதே எல்லோருடைய நம்பிக்கையும்.

மழைக்கு அடுத்தபடியாக நெல்லுக்கு இக்காலத்தில் முக்கியமான தாகிவிட்ட செயற்கை உரம் தேடிக்கொள்வதே கமக்காரரின் கவலை. மழையை வாங்க முடியாது. உரம் காசு கொடுத்து வாங்கலாம்.

பொதுவாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னர், வவனியா முதலிய இடங்களில் காணப்படும் மண்ணில் காலகச்சத்துக் குறைவு. இந்தக் குறையை நிவர்த்திக்கவல்ல செயற்கை உரம் அமோனியம் சல்பேட். ஆகவேதான் எங்கள் அரசாங்க விவசாயப் பகுதியினரும் நெல் வயல்களுக்குக் கூடுதலான அமோனியம் சல்பேட்டை உபயோகிக்கும்படி சிபார்சு செய்து வருகின்றனர். நூறு ருத்தல் அமோனியம் சல்பேட் ஏறக்குறைய முந்நூறு ருத்தல் அதிகமான நெல்லை விளைவிக்கிறது

அமோனியம் சல்பேட்டிலிருந்து கிடைக்கும் காலகம் தாவர வளர்ச்சிக்கு மற்றைய உணவுச் சத்துகளைவிட இன்றியமையாதது. அது பயிரிலைகளை நல்ல பச்சை நிறம் அடையச் செய்வதோடு அவற்றை பெரிதாக்கி பயிரை விரைவில் வளரச் செய்து விளைவையும் பெருக்குகிறது. பயிர்களில் புரதப் பொருட்களைக் கூட்டுகிறது. போதியளவு காலகச்சத்து கிடைக்காவிட்டால் பயிரிலைகள் மஞ்சள் பெயர்ந்து வளர்ச்சி குறைந்து, விளைவும் குறைந்துவிடும்.

தனிய அமோனியம் சல்பேட்டை மட்டுமே நம்பியிருப்பது பிழை. திறமான விளைச்சல் பெற வேண்டுமானல் தொழு எரு தழை எரு கூட்டெரு இவற்றுடன் அமோனியம் சல்பேட்டையும் சேர்க்க வேண்டும். ஏனென்ருல், அமோனியம் சல்பேட்டை நிலத்தில் தூவியவுடன் அது உடனடியாக மண்ணில் உள்ள நீருடன் சுவறி கீழ்நோக்கிப் பரவும், பயிரின் வேர்கள் அதைக் கிரகித்துக் கொள்ளும். மற்ற உரங்களிலுள்ள காலகத்தை வெளிப்படுத்தும் தன்மையும் இதற்குண்டு போதியளவு காலகத்தை வேர்கள் கிரகித்துக் கொண்டவுடனே பயிர் தானுகவே ஓங்கி வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுக்கிறது.

நெல் முதலிய தானியப் பயிர்களுக்கு அவை சுமார் ஓரடி உயரம் வளர்ந்த பின்பே அமோனியம் சல்பேட்டைத் தூவலாம். அதைத் தனியாகவும் அல்லது மற்ற எருக்கள் கலந்தும் தூவலாம்.

அமோனியம் சல்பேட் நெல்லைத் தவிர பிறதாவரங்களுக்கும் இன்றியமையாத ஓர் உரமாகும். தென்னை, பழமரங்கள் முதலியவற்றிற்கு மரத்தைச் சுற்றி வட்டமாகக் குழி தோண்டி மரத்துக்கு மும்மூன்று ருத்தலாக மண்ணுடன் கலந்து மூட வேண்டும். புகையிலை, மிளகாய், வெங்காயம் முதலியவற்றிற்கு ஏக்கருக்கு சுமார் 200 ருத்தல் மண்ணில் புதைக்க வேண்டும். காய்கறி வகைகளுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போகிறது. நமக்கு அதிக கஷ்டமின்றி அரசியல் விடுதலை அளித்தமைக்காக பிரிட்டனுக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டியதே. ஆனால் அரசியல் விடுதலை கிடைத்தாலும் பொருளாதார விடுதலை இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. பிரிட்டன் உள்ளிட்டு வெளிநாடுகளின் தயவை நம்பியே நாம் வாழவேண்டியுள்ளது. தன்நிறைவுக்கான முறையில் நம் பொருளாதாரத்தை அடியோடு மாற்றி அமைத்தாலே, நாம் கவலையின்றி வாழமுடியும்.

திடீரென இப்பெரியமாறுதலைச் செய்துவிட முடியாது. மேலும் உலகில் எல்லா நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைத்தாலே எல்லாரும் அமைதியாக வாழலாம். வல்லரசுகள் சுயலாபத்தில் மட்டும் கண்ணுக இராமல் மற்ற நாட்டு மக்களும் வாழ வேண்டுமென்று எண்ணங்கொண்டால், இலங்கை முதலிய கூட்டுச்சேரா நாடுகள் உற்பத்தி செய்யும் மூலப்பொருள்களை நியாயமான விலையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யும் காரியம் செய்யுமென்றே நம்புவோம்.

அதற்கிடையே கூட்டுச்சேரா நாடுகள் அடிக்கடி கூடிப்பேசி, பொருளாதார ஒத்துழைப்புக்கானவழிவகைகளைச் செய்தல் அவசியம். அதில் ஒவ்வொரு நாடும் கூடுமானவரை தன்நிறைவுக்கான திட்டம் அமைத்து செயலாற்றினால் தான் அரசியல் சுதந்திரமும் அமைதியும் நீடித்து உண்மையில் நன்மைசெய்யும். இன்றேல் அமைதியை இழந்து மீண்டும் மாற்றானுக்கு அடிமைப்படநேரிடும். இந்த ஆபத்தையெல்லாம நன்குணர்ந்தே புதிதாக சுதந்தரம் அடைந்த கூட்டுச்சேரா நாடுகள், தங்களுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு இருக்க வேண்டியதை சரியாக வற்புறுத்தி யிருக்கின்றன. வெறும் பேச்சுடன் இது நின்றுவிடாமல் செயலிலும் நிறைவேறுமென்று சம்பந்தப்பட்ட மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பர்.

## "திருகுவலிகள்"

தலைவலிக்கு வைத்தியம் செய்ய அது திருகுவலியான கதையொன்றுண்டு. அதுபோல மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்க்க அமெரிக்கா எடுத்த முயற்சி, புதுப்புதுச்சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதைப் பார்க்கின்றோம். சமாதானப் பேச்சு நின்றுவிட்டது ஒருபுறமிருக்க பாலஸ்தீன் விடுதலைக் கமாண்டோ வீரர்கள், மேற்கத்திய நாடுகளின் நான்கு விமானங்களைத் திசைதிருப்பி, ஒரு பெரிய அமெரிக்க விமானத்தை நாசமாக்கியதுடன், விமானப் பிரயாணிகள் பலரைப் பிணையில் வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே மேற்கு ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து, பிரிட்டன் முதலிய நாடுகளில் சிறைப்பட்டுள்ள பாலஸ்தீன் கமாண்டோ வீரர்களை விடுதலைசெய்வதுடன், றொபேர்ட் கென்னடியைக் கொலைசெய்த குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஸிர்ஹான் எனும் அராபியரையும் விடுதலைசெய்ய வேண்டுமென்றும் அப்பொழுதுதான் பிணையிலுள்ள விமானப் பிரயாணிகளை விடுதலைசெய்ய முடியுமென்றும், ஒரு குறிப்பிட்ட கெடுவுக்குள் பதில் வேண்டுமென்றும் இறுதி எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

பிரயாணிகளின் உயிர்களைக் காக்க, விசேஷ முயற்சிகள் செய்யப்படுகின்றன. அமெரிக்காவின் நிலையோ பெரிய தர்ம சங்கடம். இந்தச் சிக்கல் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்தால், பாலஸ்தீன் கமாண்டோக்களின் சம்மதத்தையும், இச்சமரசப் பேச்சு விஷயமாகப் பெறுமற்போனதே என்பது விளங்கும். பாலஸ்தீன் கமாண்டோக்களை அலட்சியப்படுத்துவதற்கில்லை. அவர்களை அடக்க ஐக்கிய அரபுக் குடியரசுக்கோ, ஜோர்டானுக்கோ முடியவில்லை. கமாண்டோக்களுக்கு அதிக செல்வாக்கும் பலமும் உள்ளது. எல்லாவற்றையும்விட, பீகிங்கின் ஆசியும், ஆதரவும் அவர்களுக்குப் பூரணமாக உள்ளன. அதுதான் பாலஸ்தீன் கமாண்டோக்களின் பலத்தின் இரகசியமாகும்.

புதுச் சீனத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மேற்காசியப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதையே இன்றைய முட்டுக்கட்டைகள் காட்டுவதாக உள்ளன. புதுச் சீனத்தை அங்கீகரித்து, அதை ஐக்கிய நாடுகள் சபையிலும் சேர்த்துக்கொள்ள அமெரிக்கா முன்வருமாயின் மேற்காசியா மட்டுமல்ல, வியட்னும் உள்ளிட்டுத் தென் கிழக்காசியப் பிரச்னையும் தீர வழிபிறக்கும். இதற்கு அமெரிக்கா சம்மதிக்குமா என்பதே கேள்வி.

வியட்னும் போருக்கு ஒரு தீர்வுகாண, பாரிஸில் நடைபெறும் சமரசப் பேச்சிலும் முன்னேற்றமில்லை. ஜெனிவாவில் நடைபெற்ற வியட்னும் சம்பந்தமான மகாநாட்டில் புதுச் சீனத்தையும் சேர்த்துக்கொண்டதிலிருந்து இவ்விஷயத்தில் புதுச் சீனத்துக்கு எவ்வளவு அக்கறை உண்டென்பது புலனாகின்றது. அப்படியிருக்க ஏன் புதுச் சீனத்தை அமெரிக்கா அங்கீகரிக்காமல் பிடிவாதம் காட்டுகின்றது. மேற்காசியப் பிரச்னையைத் தீர்க்க, கம்யூனிஸ்ட் நாடான ரஷ்யாவின் உதவியை நாடும் அமெரிக்கா வியட்னும் பிரச்னையைத் தீர்க்க ஏன் புதுச் சீனத்தின் உதவியை நாட மறுக்கின்றது.

மேற்காசியாவிலோ, வியட்னுமிலோ அமைதி ஏற்படவேண்டும் என்ற உண்மையான விருப்பம் அமெரிக்காவுக்கு இருக்குமாயின், இனியும் புதுச் சீனத்தை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவைக்க முடியாது. அணு ஆயுத வல்லரசாக வளர்ந்துள்ள புதுச் சீனம் ஒத்துழைக்குமாயின், அவ்விருமுனைகளில் மட்டுமன்றி, உலகிலும் சமாதானம் ஏற்பட வழிபிறக்கும். அதனால்தான் லுஸாக்காவில் கூடியுள்ள கூட்டுச்சேரா நாடுகளும், புதுச் சீனத்தை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்க்கவேண்டுமென்று தீர்மானித்துள்ளன. இதைப் பற்றி அமெரிக்கா புனராலோசனைசெய்து, புதுச் சீனத்தை அங்கீகரிக்குமாயின் மேற்குறித்த பிரச்னைகளுக்கு மட்டுமன்றி, உலக சமாதானத்துக்கும் வழிபிறக்கலாம். இன்றேல், தலைவலிகள் திருகுவலிகளாகுமாயின் மூன்றாவது உலக யுத்தத்தில்தான் அது முடியக்கூடியதாக இருக்கும். இவ்விஷயம் அமெரிக்காவுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது.

சிய சமய ஸ்தாபனத்தில் மறைக் கல்வி பயில்வதற்காக சென்றுள்ளார். இவர் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் கனிஷ்ட பாடசாலையின் அதிபராகப் பணி புரிந்தவர்.

……

## சண்முகார்ச்சனை

யாழ்ப்பாணம், சனி

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமி கோவிலில் இன்று ஆவணி ஓண அபிஷேகமும் சண்முகார்ச்சனையும் நடைபெறுகின்றன.

## சாரணர் குழு கூறுகிறது

கொழும்புத்துறை, சனி

அண்மையில் கீரிமலையில் கண்டுபிடிக்கப்பட்டது பழங்காலத்துச் சுரங்கப்பாதையல்லவென்றும் அது தரைக்கீழ் அருவி என்றும் சாரணக் குழுவொன்று தெரிவிக்கிறது.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்து கீரிமலையில் வெடி வைக்கப்பட்ட பொழுது இச் சுரங்கம்கண்டு பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

யாழ் மாவட்ட 30-வது சாரணியக் குழுவின் காங்கேசன்துறை ஆங்கில மகா வித்தியாலய உதவிச் சாரணர்கள் இங்கு நேரில் சென்று ஆராய்ந்தனர். சுரங்கத்தில் வடபகுதி நோக்கிச் செல்லும்வழி கடலுக்குச் செல்வதாயும்மற்றொருபிரிவு சிறிதுதூரம் சென்று இரண்டாகப் பிரிந்து அவற்றிலொன்று தென் கிழக்கு நோக்கி நிலாவரைக்கும் மற்றது வெளவால்பிராய் என்னுமிடத்திற்குத் தென்மேற்கு நோக்கிச் செல்வதாயும் சாரணக்குழுவினர்தெரிவித்தனர். நிலாவரையும் வெளவால்பிராயும் வற்றாத நீரூற்றுக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் ஊற்றுக்களுடன் தொடர்பான தரைக்கீழ் அருவி கடலுடன் சென்று முடிவடைகின்றதாம்.

இச் சுரங்க வழியானது சீரற்ற அமைப்புடையதாகவுள்ளது. மேற்பகுதி முள்ளரம் போன்றும் இடையிடை அரைவட்ட வால் அமைபுடையதாகவும்கீழ்ப் பகுதி ஒழுங்கற்றதாயும் வட தென்மேற்பாதைகள் சகதியுள்ளதாயும் தென்கிழக்கு வழியில் நீர் காணப்படுவதாகவும் உள்ளது. நீர் கொண்டவழி கண்டுபிடித்த இடத்திலிருந்து உட் செல்ல நீரின் அளவு கூடிக்கொண்டு செல்கின்றது மேற்பரப்பிலிருந்து நீர்க்கசிவும் உப்புத் தன்மையும் காணப்படுகிறது.

உப்பு மூலப்பொருள் படிந்து படிந்து அது ஒளியில் பிரகாசிக்கும் தன்மையுடையதாகவுள்ளது. பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினர் இட்ட அமோனியம் வெடிமருந்து நீருடன் சேர்ந்து பிரகாசிக்கும் தன்மையும் ஒருவகை மணமும் காணப்படுகிறது என சாரணர்குழு தெரிவித்தது.

சேற்று வழியில் சாரணர் குழு 350யார் தூரம் நூல் ஏற்றி, திசைகாட்டி [illegible] தம் என்பனவற்றுடன் சென்றபோது 300 யாருக்கு அப்பால் பந்தம் சுடர்விட்டு எரியும் தன்மை குறைவானதுடன் மூச்சுத் திணறலும் உண்டாகியதாயும் இதனால் பயணத்தை 300யாருடன் நிறுத்திவிட்டதாயும் நீர்வழியே எட்டாத் தண்ணீர்வரை 130 யார் தூரம் நால்வர் சென்றதாயும் குழுவினர் தெரிவித்தனர்.

சுரங்கவழியின் மேற்பரப்பு வெடியதிர்ச்சியினால் அபாயகரமான நிலையில் உள்ளதாம்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கோட்டை வெள்ளி

இலங்கைக்கு இராஜாங்க விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு கோரிவிடுத்த அழைப்பிதழுக்கு பாப்பரசர் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு நன்றி தெரிவித்துள்ளார். தான் அவ்வழைப்பைக்கருத்திற்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் தீவுகள், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் பொழுது இலங்கைக்கும் விஜயம் செய்யுமாறு அழைப்பு அனுப்ப வேண்டுமென அமைச்சர் சபை ஏகமனதாக செய்த முடிவை ஏற்றுப் பிரதமர் பாப்பரசருக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். இவ்வழைப்புக்குப் பதிலளிக்கையிலேயே பாப்பரசர்மேற்கண்டவாறு பிரதமருக்குத் தெரிவித்துள்ளார்.

அமோனியம் சல்பேட்டை உபயோகிக்கும்படி சிபார்சு செய்து வருகின்றனர். நூறு றூத்தல் அமோனியம் சல்பேட் ஏறக்குறைய முந்நூறு றூத்தல் அதிகமான நெல்லை விளைவிக்கிறது

அமோனியம் சலபேட்டிலிருந்து கிடைக்கும் காலகம்

## யாழ். புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், சனி

திரு. என். ரி. டபிள்யு. அமரசேகரா யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 16-ந்திகதி பதவியேற்பாரென எதிர்பார்க்கப் படுகிறது.

வட்டமாகக் குழி தோண்டி, மரத்துக்கு மும்மூன்று றூத்தலாக மண்ணுடன் கலந்து மூட வேண்டும். புகையிலை, மிளகாய், வெங்காயம் முதலியவற்றிற்கு ஏக்கருக்கு சுமார் 200 றூத்தல் மண்ணில் புதைக்க வேண்டும். காய்கறி வகைகளுக்கு ஒரு சதுரயாருக்கு கால் றூத்தலும் வாழை மரமொன்றுக்கு கால்றூத்தலும் உபயோகிக்கலாம்.

இவ்வுரத்தை உபயோகிக்கும்போது மண்ணில் போதிய ஈரம் இருத்தல் மிகவும் அவசியம். அப்படி இல்லாவிட்டால் உரம் போட்டவுடன் தாராளமாக நீர் பாய்ச்சுதல் வேண்டும்

— கலப்பை

# சுரங்கத்தை ஆராய்ந்தால் பலவரலாற்று உண்மை தெரியும்

## கலாசார அமைச்சருக்கு

## திரு. ஜெயபாலசிங்கம் கடிதம்

காங்கேசன்துறை, வெள்ளி

கீரிமலைக்குச் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுரங்கம் இந்நாட்டின் புராதன வரலாற்றையும் கலாச்சார, நாகரீகம் பற்றிய தகவல்களையும் அறியக் கூடியதாக இருக்கிறதென்றும் இந்தச் சுரங்கத்தைப் பார்வையிட்டு இதுபற்றி ஆராயும்படி புதைபொருளாராய்ச்சி இலாகாவினருக்கு உத்தரவிடும்படி காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு கே. ஜெயபாலசிங்கம் கலாசார அமைச்சருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டுள்ளார். அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ள அரசாங்க என்ஜினியரிங் கூட்டுத்தாபனத்தினர் துறைமுகப் பகுதிக்குத் தேவையான கற்களைப் பெறுவதற்கு சடையம்மா கோவில் பகுதியில் 'டைனமைற் வெடி வைத்து பாறைகளைத் தகர்த்தபோது ஒரு சுரங்கப் பாதையை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சுரங்கப்பாதை வேறு உட்பாதைகளுக்கும் நன்நீரூற்றுக்களுக்கும் வழிகாட்டுகின்றன. இந்தச் சுரங்கம் பற்றி முழு அளவில் புதைபொருளாராய்ச்சி நடத்தினால் நமது நாட்டின் தொன்மையான கலாசார நாகரீகம் பற்றியும் வரலாறு பற்றியும் புதிய பல தகவல்களைப் பெற முடியுமென்பது எனது நம்பிக்கை. குதிரைமுகம் கொண்டிருந்த மாருதப்புரவீகவல்லி என்னும் இளவரசி குதிரை முகத்துடன் வெளிவர வெட்கம் கொண்டு இந்தச் சுரங்கக் குகைக்குள் நீண்டகாலம் இறைவனைத் தியானித்ததாகவும் இதன் பின்னரே முருகப்பெருமான் அவள் கனவில் தோன்றி கீரிமலையில் நீராடும்படி கூறியதாகவும் இதன்பின்னர் குதிரைமுகம் மாறி மனிதமுகம் ஏற்பட்டதாகவும் சரித்திரம் கூறுகிறது. இந்த அற்புதத்தின் நினைவாகத் தான் சரித்திரப்பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் ஆலயத்தை மாருதப்புரவீகவல்லி கட்டுவித்தாளாம். மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை ஆகிய பெயர்களுக்கும் வரலாற்றுத் தொடர்புகளுண்டு. புதிய சுரங்கப் பாதை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து தீவிர ஆராய்ச்சி செய்யப்படவேண்டும்.

எனவே இந்தச் சுரங்கப் பகுதியைப் பார்வையிட்டு ஆராய்ச்சி செய்து தகவல்களைச் சேகரிக்க புதைபொருளாராய்ச்சிப் பகுதியினருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சுரங்கப் பாதை பற்றி திரு. ஜெயபாலசிங்கத்திடம் நமது நிருபர் கேட்டபோது சுரங்கப் பாதையைப் பலர் சென்று பார்த்து வருவதாகச் சொன்னார்.

"புராதன சிற்பவேலைகள் பொருந்திய கற்கள் ஆழமான ஊற்றுள்ள கிணறு ஒன்று, சந்தன வாசம் வீசும் இடம் ஆகியனவும் ஒவ்வொரு நாற்பது அடி தூரத்திலும் கிளைகளாகப் பிரிந்து செல்லும் குகைகள், சில குகைகள் அகலமாகமாகவும், சில ஒடுக்கமாகவும் இருப்பதாகவும் இவை ஆராய்ச்சி செய்யப்படின் பண்டைக்கால தமிழரின் சரித்திர உண்மைகளை மேலும் ஊர்ஜிதப்படுத்தும் என்றும் திரு. ஜெயபாலசிங்கம் கூறினார்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## குழந்தைகளைத் திருடியவருக்கு மரணதண்டனை

ராவல்பிண்டி, செப் 11

குழந்தைகளைத் திருடிய ஒருவருக்கு பாகிஸ்தானில் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

மேற்கு பாகிஸ்தானில் மூன்று ஆண்டுகளாக சுமார் 550 குழந்தைகளைத்திருடிச்சென்று பிச்சைக்கார கண்டிராக்டர்களிடம் விற்றுவந்ததாக நிஸாஹிசேன் என்ற மேற்படி நபர் ஒப்புக்கொண்டாராம்.

## மலேஷியாவில் இலங்கை மிஷனரிகள்

பண்டத்தரிப்பு, வெள்ளி

மலேஷியாவில் ஓ.எம்.ஐ. எனப்படும் அமலோற்பவ பரித்தியாகிகள் சபையை ஆரம்பிக்கும் நோக்குடன் 1965ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வண. நவரத்தினம், வண. கவுச்சொனென் ஆகியோருடன் அண்மையில் மன்னரிலிருந்து சென்ற வண. எயியானுஸ் மொருயஸ் அடிகளும் சேர்ந்து கொண்டார். மலேஷியாவில் கோலாலம்பூர் மேற்றிராணியாரான வந்தனைக்குறிய, வேந்தர் கோன் அடிகளின் அழைப்பின் பேரில் இவர்கள் அங்கு சென்றுள்ளனர். இவர் யாழ். நகரைச் சேர்ந்தவராவர்.

வண. சாலெற் அடிகளும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுள்ளார். மலேசியாவில் தமிழ்பேசும் மக்களைக் கொண்ட பகுதியில் இவர்கள் தொண்டாற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org